சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 05	அக்டோபர் 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 05	OCTOBER- 2022	Rs. 15/-



"குமாரதாசன்" ஸ்ரீ மத் பாலசுந்தர சுவாமிகள்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ. **550** மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-5 அக்டோபர் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. டாக்டர்.S.சௌம்யா, ஊட்டி.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி. அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

எப்போது எனது துயரங்கள் தீர போகிறது. இன்னும் எத்தனை காலம் தான் நான் காத்திருக்க வேண்டும் என்று உன் மனம் வாடுகிறது இல்லையா?

நான் இருக்கும்போது கவலை ஏன் உனக்கு! நான் எங்கும் போய்விட வில்லை. உனது கண்களின் எதிரே உனக்கு முன்பாகவே இருக்கிறேன். திரும்பும் திசை எல்லாம் உன்னுடன் இருக்கிறேன். நீ காண்கின்ற ஒவ்வொரு ஜீவராசிகளின் வடிவிலும் இருக்கிறேன். ஏன் உன்னுள்ளும் இருக்கிறேன்.

வாழ்க்கையில் மிக வேகமாக வளர்ந்து சிறப்பாக வாழப்போகிறாய் கலங்காதே! அனைவரும் வியக்கும் வண்ணம் உயர போகிறாய்.தேவை இல்லாமல் மனதில் கற்பனையை வளர்த்து கொள்ளாதே! என்னை மீறி எதுவும் நடைபெறாது. ஆம் எனது குரல் உனது செவிகளில் கேட்கிறதா?

நான் எப்போதும் உன்னுடன் பேசிக்கொண்டேதான் இருக்கின்றேன். நீதான் நான் பேசுவதை கவனிப்பது இல்லை. இனியாவது நீ பேசுவதை விட்டுவிட்டு, நான் பேசுவதைக் கவனி!

உனக்கு வேண்டியதை எல்லாம் வழங்க போகிறேன். காத்திரு, எனது அன்பு செல்வமே! நான் இருக்கிறேன் நிழலாக, உனக்காக, எப்போதும்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...




அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து ஒன்றாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 04.09. 2022 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழா காலை 9 மணிக்கு ஆசிரியரின் தியான நிகழ்வுடன் இனிதே துவங்கியது. தொடர்ந்து திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் அவர்களின் பஜனை நிகழ்ச்சி நிகழ்ந்தது. காலை 10 மணிக்கு இம்மாத வெளியீட்டு விழா நடைபெற்றது.

இம்மாத இதழை திண்டுக்கல் குஞ்சனம் பட்டியில் சீவ சமாதி கொண்டிருக்கும் ஸ்ரீ பாக்கியநாதன் (எ) பிச்சை சுவாமிகளின் மூத்த மகள், திருமதி. பாரதி பழனி, அவர்கள் வெளியிட, சித்தர் ஜீவன் திரு. வெங்கடேசன் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.



விழாவில் சித்தரின் மகள்கள், திருமதி. பரமேஸ்வரி சுரேஷ்பாபு, செல்வி. பிரேமா ஆகியோரும் அவர்களது குடும்பத்தார் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதழ் வெளியீட்டிற்கு அனைவரும் திருவண்ணாமலை மற்றும் பெங்களூரில் இருந்து வந்து கலந்து கொண்டார்.

அனைவரையும் அழைத்து வந்து விழாவில் கலந்து கொள்ளச் செய்த சித்தர் நேசன் திரு. வெங்கடேசன் அவர்களுக்கு எங்களது

மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றோம்.

சித்தர்களின் ஆசியில் லாமல் இங்கு எதுவும் நிகழ்வதில்லை. சித்தர் ஸ்ரீ பிச்சை சுவாமிகளின் குடும்பத்தினர் அனை வரும் வந்து புத்தக வெளி யீட்டில் கலந்து கொண் டது சித்தரின் ஆசியில் லாமல் சாத்தியம் இல்லை. அந்த வகையில் நமது புத்தகத்திற் கும், அன் றைய வெளியீட்டு விழா வில் கலந்து கொண்ட பக்தர்களுக் கும், சித்தர் பெருமானின் ஆசிகள் பரிபூரணமாக கிடைத் ததை அனைவரும் உணர்ந்தோம்.



விழாவில், திரு.சுந்தர் சாய், திரு வெங்கடேசன், திரு.அகஸ்டின், திரு.செந்தில் குமார், திரு. உமா சங்கர், திரு.சிவராமன் ஆகியோர்





கலந்து கொண்டு சிறப்பித்தனர். இம்மாதம் நமது இதழுக்கு, சென்னை திரு. நாகராஜன் அவர்கள், பத்து ஒரு வருட சந்தாவும், அயனாவரம் திரு.வெங்க டேசன் அவர்கள், இரண்டு மூன்று வருட சந்தாவும், கதிர் நரசிங்காபுரம், திருமதி. திலகம் அவர்கள் மூன்று, ஒரு வருட சந்தாவையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளனர். அவர்களும், அவர்களது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்து கிறோம்.

வந்திருந்த அனைத்து சாயி பக்தர்களுக்கும், " சாய் தியானாலயா பிரார்த்தனை மையம்" சார்பில் அன்ன



பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும், இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந்தொற்று கட்டுக் குள் வந்து உலக மாந்தர்கள் அனை வரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.


மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

மூன்றாம் கண்



ஒருவனது இரண்டு புருவங்கள் இடையே கதவு ஒன்று இருக்கிறது.

அதுவே "ஆன்மீகத்தின் நுழைவு வாயில்" என்று நம்முடைய மெய் ஞானிகள் கண்டுபிடித்தது ஆன்மீக வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மகான்கள் இதை மூன்றாவது கண் என்று அழைப்பார்கள் சாதாரணமாக மனிதனின் இரண்டு கண்களும் வெளியில் தெரியும. ஆனால், இந்த மூன்றாவது கண் சரியாக இரண்டு புருவ மத்தியில் உணர்வு மயமாக அமைந்துள்ளது.

அது திறந்தால் உங்களுடைய உள் உலகம், இந்த வெளி உலகம் போல் தெளிவாக உணரப்படும்.

அப்பொழுதுதான் நீங்கள் உடலாகவும் இல்லை,மனமாகவும் இல்லை என்பது உங்களுக்கு புரியும். முதன்முதலில் நீங்கள் ஒரு சாட்சியாக இருப்பதும் புரியும். அதாவது உங்கள் உயிர்த் தன்மை சாட்சியாக இருக்கிறது

இது உங்களை மனதிற்கு அப்பால், புரியாத, அதற்கு அற்புதமான அதிசயம்மிக்க உலகுக்கு அழைத்து செல்லும்.

அதற்கு பிறகு உங்கள் வாழ்க்கை ஆனந்த மயமானதுதான் ஆடல், பாடல் நிறைந்தது தான்.

நீங்கள் சுத்த தங்கம் போல ஆனந்த மிகுதியில் ஜொலித்து ததும்பி வழிவீர்கள்.ஏனெனில், நீங்கள் புதையல்களிலேயே சிறந்த புதையலை அடைந்திருக்கிறீர்கள். எனவே மூன்றாம் கண்ணை தேடி திறந்து கொள்ளுங்கள்.

எல்லாம் அறிந்த பாபா

சியாம்தாஸ் என்ற பாபாவின் பக்தர் ஒருவர், யாத்ரீகர்கள் குழு ஒன்றோடு சேர்ந்து சிறிய நீராவிக்கப்பலில் துவாரகைக்குப் புறப்பட்டார். அவர் கப்பலில் பயணிப்பதற்கான பயணச்சீட்டையும், பணத்தோடு சேர்த்து தன் மணிபர்ஸில் வைத்திருந்தார்.

அன்று மாலை அவர் கப்பலின் ஓரத்தில் நின்று கொண்டிருக்கும் போது அவரது பர்ஸ் கை தவறி கடலுக்குள் விழுந்து விட்டது. கப்பல் அலுவலர்களிடம் இத்தகவல் தெரிவிக்கப்பட்டபோது, சியாம்தாசின் பயணச்சீட்டை ஏற்கனவே பரிசோதித்து விட்டபடியால் அதைக் குறித்து கவலை கொள்ள வேண்டாம் என்று கனிவுடன் கூறிவிட்டனர்.

ஆனால் கையில் இருந்த மொத்த பணமும் கடலில் விழுந்து விட்டதால் சியாம்தாசுக்கு செலவிற்கு பணம் இல்லாமல் பெரும் திண்டாட்டமாகி விட்டது. மிகுந்த சிரமத்திற்குள்ளான சியாம்தாஸ் எப்போதும் போல் பாபாவிடம் பிரார்த்தனை செய்து கொண்டார்.

அன்று இரவு சியாம்தாசின் மகன் கோபால் கிரிதர் கனவு ஒன்றைக் கண்டார். அதில் ஓர் பக்கீர் அவரது படுக்கை அறைக்குள் வந்து, அவரை எழுப்பி, "துவாரகாவில் உள்ள உன் தகப்பனாருக்கு பணம் அனுப்பு" என்று கூறினார். கண் விழித்துப் பார்த்த கிரிதர், ஒருவரையும் காணாததால் மீண்டும் படுத்து தூங்கிவிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின் அதே



பக்கீர் மீண்டும் அவரது கனவில் தோன்றி, சற்று கோபத்துடன், உன் அப்பா துவாரகாவில் பணத்திற்கு திண்டாடிக் கொண்டிருக்கின்றார். உன் அப்பாவிற்கு பணம் அனுப்பச் சொன்னால் நீ படுத்து தூங்கிக் கொண்டிருக்கின்றாயா என்று கூறினார்.

இம்முறை கண்விழித்த கிரிதர், தனக்கு ஏற்பட்ட கனவைக் குறித்து சிந்தித்தார். தம் தந்தை துவாரகாவில் ஏதோ பணப் பிரச்சனையில் மாட்டிக் கொண்டிருக்க கூடும் என்று அவருக்குப் பட்டது. பொழுது விடிந்ததும் முதல் வேலையாக தனது தந்தையின் பெயருக்கு துவாரகைக்கு ரூபாய் 50

தை மணியார்டர் அனுப்பினார்.

தனது மகன் தான் கேட்காமலேயே அனுப்பிய பணத்தை பெற்றுக் கொண்ட சியாம்தாஸ் யாத்திரையை எந்தவித கஷ்டமும் இல்லாமல் ஆனந்தமாக நிறைவு செய்தார்.

துவாரகாவில் இருந்து திரும்பிய அவர், கிரிதரிடம் பணத்தை கடலில் போட்டுவிட்டு, நான் இருந்த இக்கட்டான நிலையில் உனக்கு எப்படி எனக்கு பணம் அனுப்பத் தோன்றியது எனக் கேட்டார். அப்போது கிரிதர் கனவில் வந்த ஒரு பக்கீர் பணம் அனுப்பச் சொன்னதை தந்தையிடம் தெரிவித்தார்.

பிறகு ஒரு முறை சியாம்தாஸ் சீரடிக்குச் சென்ற போது, கோபர்கானில் இருந்து சீரடிக்குச் செல்ல குதிரை வண்டி கிடைக்கவில்லை. எனினும் அவர் கோதாவரியில் புனித நீராடி, அங்கிருந்த தத்தர் கோவிலில் பூசை செய்து வழிபட்டு திரும்பி வரும்போது, இரண்டு பயணிகளுடன் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது.

அதில் இருந்த பயணிகள் இருவரும் வண்டிக்கு இன்னொரு பயணி தேவை என்றும் நீங்கள் வருகின்றீர்களா என்று கேட்க, சியாம்தாஸ் ஆனந்தமாக அந்த வண்டியில் ஏறிக்கொண்டு, சீரடியைச் சென்று அடைந்தார். வண்டிக்காரர் சியாம்தாசிடம் வழக்கமாக வாங்கும் ஐந்து ரூபாய்க்குப் பதில் ஒரு ரூபாய் மட்டுமே வாங்கிக்கொண்டார்.

சியாம்தாஸ், பாபாவின் "தூளே" தரிசனத்திற்காக துவாரகாமாயி சென்றார். (தூளே தரிசனம் என்பது பக்தர்கள் சீரடியை அடைந்தவுடன் குளிக்காமல் பாபாவின் முகத்தைமட்டும் தூர இருந்து தரிசிப்பது) அப்போது பாபாவின் அருகில், பூட்டி, பாலா சாஹேப், சின்சினிக்கர், ஷாமா, மற்றும் சில பக்தர்கள் அமர்ந்திருந்தனர்.


அப்போது, சியாம்தாசை கண்ட ஷாமா பாபாவிடம், தேவா, சியாம்தாஸ் உங்களை காண வந்துள்ளார் என்று கூறினார். அதற்கு பாபா நான் அவனை நீண்ட காலமாக பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன். இனியும் அவனை நன்கு பார்த்துக் கொள்வேன். என்று கூறிவிட்டு, பணத்தை கடலில் தொலைந்து விட்டாய். அல்லா மாலிக் உனக்கு பணம் கிட்டும்படி செய்தார். என்றார்.

சியாம்தாஸ், பாபாவின் அன்பையும், அரவணைப்பையும் கண்டு உணர்ச்சி மேலிட தன் தலையை பாபாவின் பாதகமலங்களில் வைத்துக் கொண்டு சுமார் 15 நிமிடங்கள் அப்படியே இருந்தார். அப்போது பாபா அவரது தலையை அன்போடு தடவிக் கொடுத்து, சியாம்தாஸ் எழுந்திரு, சிறிது நேரம் என்னோடு அமர்ந்திரு என்று கூறினார்.

சியாம்தாஸ் தன் வாழ்க்கையின் பிற்பகுதியிலும்கூட பாபாவின் கருணையோடு கூடிய அரவணைப்பிலேயே இருந்தார்.



குழந்தையை காத்த பாபா



பாபா தன் ஸ்தூல சரீரத்துடன் மிக அரிதாகவே சீரடியை விட்டு வெளியில் செல்வதுண்டு. அதுவும் சில நேரங்களில் அருகில் உள்ள ரகதா, அல்லது, நிகோஜ், நீம்காவன், போன்ற கிராமங்களுக்குச் செல்வார். அவ்வளவுதான்.

அங்கு அவர் நானா சாஹேப் டேங்லே வீட்டிற்குச் செல்வார். டேங்லே மிகவும் வசதியானவர். ஏராளமான நில புலன்களைக் கொண்டவர். பாபு மாலி என்பவர் அவரது பண்ணை வேலைகளை பார்த்துக் கொள்பவர். டேங்லேயின் மேய்ச்சல் நிலத்திற்கு அருகில் ஓர் ஒற்றையடிப்பாதை உண்டு. டேங்லேயின் வீட்டிற்கு வரும்போதும், போகும் பாபா அந்த பாதையைத் பயன்படுத்துவார்.

இந்த லீலை மழைக்காலத்தில் நடைபெற்றதாகும். பாபு மாலி சுமார் 15 வேளாண் தொழிலாளர்களுடன் புல் அறுப்பதற்காக மேய்ச்சல் நிலத்திற்கும் சென்றிருந்தார். அந்த மேய்ச்சல் நிலத்திற்கு அருகாமையில் ஓர் புளிய மரமும், ஒரு தூங்குமூஞ்சி மரமும் இருந்தது.

அங்கு வேலைக்குச் சென்றிருந்த கூலிப் பெண் ஒருத்தி, தன் குழந்தையை அந்த புளியமரத்தில் அடியில் படுக்க வைத்துச் சென்றிருந்தார். அந்த மரம் மிகப்பெரியதாக இருந்ததால் ஏராளமான நிழலைப் பரப்பியது. அந்த மரத்தடி நிழலில் மக்கள் அடிக்கடி இளைப்பாறுவது வழக்கம்.

அங்கு குழந்தையை வசதியாக படுக்க வைத்துவிட்டு, அந்தப் பெண் புல் அறுக்கச் சென்றிருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு, மேகங்கள் இருண்டன. கருமேகங்கள் சூழ்ந்து காற்று பலமாக வீசியது. பலத்த சூறாவளிக்காற்றுடன் கனமழை பெய்ய ஆரம்பித்தது.

அங்கு வேலை செய்து கொண் டிருந்த அனைவரும் கடும் அடை மழையில் இருந்து தப்பித்துக் கொள்ள இடம் தேடி ஓடினர். அப்போது மேய்ச்சல் நிலத்திற்கு அருகில் பயன் படுத்தப்படாத குடிசை ஒன்று இருந்தது. அந்தக் குடிசையின் கீழ் அனைவரும் ஒதுங்கி நின்றனர்.

தன் குழந்தையை மரத்தடியில் படுக்க வைத்துச் சென்ற தாயாரும் அதை முற்றிலுமாக மறந்து விட்டு, மற்ற தொழிலாளர்களுடன் சேர்ந்து ஓடி அந்தக் குடிசைக்கருகில் நின்றி ருந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு தான் அவளுக்கு குழந்தையின் நினைவு வந்தது. அவ்வளவுதான் தாய்பாசத்துடன் அவள் அலறித் துடித்துக் கொண்டு, குழந்தையின் பெயரைச் சொல்லிக் கத்தியவாறே மரத்தடியை நோக்கி ஓடினாள்.

ஆனால் கொட்டித்தீர்த்த கன மழையால் ஆங்காங்கே நீர் தேங்கி சிறுசிறு குடைகளாக தேங்கி நின்றது. அவைகளில் ஏறி இறங்கி குதித்து ஓடினாள் அந்த தாய். பாபு மாலியும் மற்றவர்களும் அவளுக்குப் பின்னாலேயே ஓடிவந்தனர். அவர்கள் புளியமரத்தில் வந்ததும் அவர்கள் பார்த்த காட்சி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஆம், மரத்தின் அடியில் பாபா குழந்தையை கையில் ஏந்தியவாறு நின்றிருந்தார். குழந்தையின் தாயார் அங்கு வந்ததும், என்ன தாய் நீ! இந்தா உன் குழந்தையை பிடி என்று கூறி குழந்தையை தாயிடம் ஒப்படைத்தார்.

குழந்தையை கையில் வாங்கிய தாய்க்கு மிகவும் ஆச்சரியம். ஏனெனில் அவ்வளவு பலத்த மழை பெய்தும் குழந்தையின் மீது ஒரு சொட்டு கூட ஈரம் இல்லை. பாபாவும் நனையாமல் நின்றிருந்தார். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். மரத்தின் கிளைகளில் இருந்து இன்னமும் நீர் சொட்டிக் கொண்டிருந்தது. மரத்தடியில் கூட நீர் குட்டையாக தேங்கிக் கிடந்தது.

பாபாவும், குழந்தையும் தான் சிறிதளவு கூட நனையாமல் உலர்வாக நின்றிருந்தனர். பாபா நின்று கொண்டி ருந்த ஒரு சிறிய பகுதி மட்டும் உலர்வாக வறண்டு காணப்பட்டது. பாபு மாலியும் மற்ற தொழிலாளர்களும் இதை நன்கு உன்னிப்பாக கண்டு உறுதி செய்து கொண்டனர்.

அப்போதுதான் பாபாவே குழந் தையை காப்பதற்காக அங்கே தோன்றியிருக்கின்றார் என்பது புல னானது. அதற்கு சில வருடங் களுக்குப் பிறகு, தூங்குமூஞ்சி மரம் பட்டுப் போனது. ஆனால் அந்த புளிய மரம் இன்றும் பசுமையாய் காணப்படுகின்றது. ஏனெனில் அதன் நிழலில் பாபா நின்று அதைப் புனிதப் படுத்திவிட்டாரல்லவா?

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 12. சீரடி பயணத்தில் பாபாவின் லீலை.



சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தின் ஏற்பாட்டின் பேரில் நாங்கள் பலமுறை சீரடி புனிதப் பயணம் செய்திருக்கின்றோம். ஒவ்வொரு முறையும் சாயிநாதர் எங்களுக்கு பல லீலைகளை செய்து, ஆனந்த அனுபவத்தையும், அற்புத ஞானத்தையும், வழங்குவார்.

ஒரு முறை 50 நபர்கள் கொண்ட குழுவாக குருவின் தலைமையில் சீரடிக்குப் புறப் பட்டோம். அது எங்களது சீரடி பயணத்தின் ஆரம்ப காலகட்டம் என்பதால், சரியான தங்கும்வசதி, தமிழக உணவு எங்கு கிடைக்கும் என்பதை அறியாமல் சிரமப்பட்டோம்.

பக்தர்கள் வருத்தமுற்றால், சாயிக்கு தாங்காதே! உடனடியாக எங்களுக்கு நல்ல வசதியான தங்குமிடம், நல்ல தமிழக உணவு, அன்பான உபசரிப்பு, வாகன வசதி இவை அனைத்தையும் ஒரே இடத்தில் கிடைக்கும்படி செய்ய பகவான் சாயி நாதர் இரக்கம் கொண்டார். அதை எங்களுக்கு எப்படி மறக்கமுடியாத அனுபவப் பாடமாக வழங்கினார் என்பதை கூறுகிறேன்.

குருவிடம், அமர்நாத் என்ற நபர் ஒருவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு மற்றொரு பாபா பத்திரிக்கையின் பெயரைக் கூறி அதன் உதவி ஆசிரியர் சீரடிக்கு வரும் பொழுது நான் தான் கைடாக இருக்கிறேன். என்று கூற, குருவும் விசாரித்துப் பார்த்ததில் அவர் கூறியது உண்மை தான் என்று தெரியவந்தது. அந்த பாபா பத்திரிக்கையில் அதன் உதவி ஆசிரியர் சீரடிக்குச் செல்லும் பயணிகள், அமர்நாத்தை தொடர்பு

கொள்ளும்படி கேட்டுக் கொண்டு ஒரு கட்டுரை வரைந்துள்ளதையும் குரு படித்து அறிந்து கொண்டார்.

எனவே நம்பிக்கையாக குரு அவர்கள் அவரிடமே, அனைத்துப் பொறுப்புகளையும் கொடுத்து ஒரு குறிப்பிட்ட தொகையையும், முன் பணமாக கொடுத்து தங்கும் இடத்தை தவிர மற்ற அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய சொல்லி விட்டார். (நாங்கள் எப்போதும் சாய் ஆஸ்ரமத்தில் தங்குவதால் ஏற்கனவே முன் பதிவு செய்திருந்தோம். இருப்பினும் அங்கு இரண்டு நாட்கள் தான் தங்க முடியும். அதிக நாட்கள் தங்க முடியாது).

சீரடி பயணத்திற்கு புறப்பட வேண்டிய முதல் நாளில் இருந்தே அமர்நாத் குருவிடம் பேசி, சீரடியில் நான்கு நாட்கள் நீங்கள் தங்கும் வசதி, உணவு வசதி அனைத்தும் தயாராக உள்ளது. நீங்கள் வரவேண்டியது பாக்கி, என்ன புறப்பட்டு விட்டீர்களா? இரயில் ஏறிவிட்டீர்களா? இரயில் புறப்பட்டுவிட்டதா? என்றெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தார்.

குருவும், எங்களிடம் வெகுநாட்கள் கழித்து இப்போதுதான் சீரடியில் நல்ல வழிகாட்டி ஒருவர் கிடைத்து இருக்கின்றார் என்று பெருமைப்பட்டுக் கொண்டார். புகைவண்டி காலை 4 மணிக்கெல்லாம் டோண்ட் என்ற நிலையத் திற்கு சென்று விடும். அங்கிருந்து அமர்நாத்தின் மூலமாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள பேரூந்தில் மூலம் சீரடிக்குச் செல்வதாக ஏற்பாடு.

முதல்நாள் இரவு 10 மணிக்கு நன்றாக உறங் குங்கள். காலையில் 4 மணிக்கெல்லாம் விழிக்க வேண்டியிருக்கும். உங்களுக் காக டோண்டில் பேரூந்து தயாராக இருக்கிறது என்று பேசினார் அமர்நாத்.

காலை 4 மணிக்கு புகைவண்டியில் இருந்து இறங்கிய குரு அவர்கள் அமர்நாத்தை தொடர்பு கொள்ள, அவரது தொலைபேசி சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. சரி தூங்கி விட்டார் போலிருக்கின்றது. சற்று நேரம் கழித்து அழைக்கலாம்.

அதுவரை பக்தர்களை தயார்படுத்தி விடலாம் என்று எங்களை புகைவண்டி நிலையத்தில் காலைக் கடன்களை



திரு.குப்தா (வலது) அவரது நண்பருடன் ஆசிரியர்



எல்லாம் முடித்துக் கொண்டு தயாராக இருங்கள் என்று கூறிவிட்டு காத்திருந்தார்.

மணி காலை 6 மீண்டும் அமர் நாத்தை தொடர்பு கொள்ள முயற்சிக்க அப்போதும் சுவிட்ச் ஆப். குருவிற்கு ஏதோ மனதினில் பொறிதட்ட, கூட்டத்தை விட்டு தனியாகச் சென்று யோசிக்கின்றார். முடிவில் பாபா ஏதோ லீலை புரிவதற்காக நம்மை சோதிக்கிறார் என்று ஒருவாறாக தம்மை நிதானப்படுத்திக் கொண்டு, சற்றும் பதட்டப்படாமல்,

எங்களிடம் வந்து பேரூந்து வருவதற்கு இன்னும் சற்று நேரமாகும். அதுவரை அனைவரும் இங்கேயே காலை உணவை முடித்துக் கொண்டு தயாராக இருங்கள் என்று கூறிவிட்டு இரயில் நிலையத்தைவிட்டு வெளியே சென்று விட்டார்கள்.

வெளியே சென்ற குருவிற்கு ஒன்றும் புரியவில்லை. நம்மை நம்பி வந்த 50 பக்தர்களுடன் இரயில் நிலையத்தில் அநாதையாக நிற்கின்றோம். என்ன செய்வது? யாரை தொடர்பு கொள்வது? எதுவும் புரியவில்லை. இதற்கிடையே பலமுறை அமர்நாத்திற்கு தொடர்பு கொண்டாலும் அதே சுவிட்ச் ஆப்.

விசயம் பக்தர்களுக்கு தெரிந்து விட்டால் ஆளாளுக்கு ஏதாவது பேசி குழப்பம் ஆக்கிவிடுவார்களே! என்ன செய்வது என்றவாறு சற்றே கவலையுடன், புகைவண்டி நிலையத் தின் வாசலில் நின்றிருக்கின்றார் குரு.

அப்போது ஒரு வயதான பயணி, குருவிடம் வந்து, நீங்கள் சாய்நாத் டிராவல்ஸ் டிரைவரா? என்று மராட்டியில் கேட்க, குருவோ இல்லை என்று தமிழில் கூறியிருக்கின்றார்.

உடனே அந்த பயணி, ஓ நீங்கள் தமிழா என்று வியக்க, குருவும் வியப்புடன், ஆமாம் நீங்களும் தமிழா என்று கேட்க, ஆமாம், நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் என்று வயதானவர் கேட்க, நான் சென்னையில் இருந்து வருகின்றேன். என்று கூறியவுடன், அவரே, தொடர்ந்து நான் பாண்டிச்சேரி, நானும் என் மனைவியும் வந்திருக்கின்றோம். சீரடி செல்வதற்கு சாய்நாத் டிராவல்ஸில் கார் புக் பண்ணியிருக்கேன். கார் இன்னும் வரவில்லை.

என்னுடைய போனில் இருந்து டிரைவர் செல்லுக்கு கால் போக வில்லை. தயவு செய்து உங்கள் செல்லில் இருந்து ஒரு கால் போடுங்களேன் என்றிருக்கின்றார். குருவும் அவரிடம் நம்பர் வாங்கி போட்டுப் பார்க்க, டிரைவர் எடுத்து இதோ இரண்டு நிமிடத்தில் வந்துவிடுகின்றேன். என்று கூறி உடனே வந்து பெரியவரையும், அவரது மனைவியையும் அழைத்துச் சென்றிருக்கின்றார்.

பெரியவர், குரு செய்த உதவிக்கு நன்றி கூறிவிட்டு, நீங்களும் சீரடிதானே வருகின்றீர்கள். அங்கு வந்ததும் என்னை வந்து அவசியம் பாருங்கள். என்றவாறே சீரடியில் தங்கும் விடுதியின் அடையாள அட்டை ஒன்றை குருவிடம் கொடுத்து, இங்குதான் நான் தங்கி இருக்கின்றேன் சந்திப்போம். என்றவாறே தம்பதிகள் காரில் ஏறிச் சென்றதும், குரு அவர்கள் அடையாள அட்டையை கையில் வைத்துக் கொண்டே அடுத்த அரை மணிநேரம் இங்கும் அங்குமாக நடந்து கொண்டே இருந்திருக்கின்றார்கள்.

முடிவாக இனிமேல் காலம் தாழ்த்தினால் பக்தர்கள் கோபப் படுவார்கள். எனவே வேறு வாகனம் ஏற்பாடு செய்து அதில் அனைவரையும் சீரடிக்கு அழைத்துச் சென்று விடுவது என்று முடிவு செய்து கொண்டு, எங்களை நோக்கி வரும்பொழுது கையில் இருந்த அடையாள அட்டையை பையில் வைப்பதற்காக எதார்த்தமாக திரும்பி பார்த்தவர், அதில் ஏதோ எழுதியிருப்பதைப் பார்த்திருக்கின்றார்.

அதில் பாபா மாஸ்டர், பாண்டிச்சேரி என்று ஆங்கிலத்தில் எழுதி கீழே செல் நம்பர் எழுதி இருந்திருக்கின்றது. அதைப் படிக்கும் போதுதான் குருவிற்கு ஒன்று புரிந்திருக்கின்றது. பாண்டிச்சேரி பாபா மாஸ்டர் எனக்கு தெரிந்தவர் என்று ஏற்கனவே அமர்நாத் கூறியது குருவிற்கு ஞாபத்திற்கு வந்திருக்கின்றது.

சாயி லீலையை ஒருவாறாக புரிந்து கொண்ட நமது குரு உடனடியாக, அந்த நம்பரை தொடர்பு கொண்டு இருக்கின்றார். ஆனால் அப்போது குருவிற்கு பாபா மாஸ்டர் யார் என்று தெரியாது. திரு. பாண்டிச்சேரி. பாபா மாஸ்டர் என்பவர் அருணாச்சலம் என்ற இயற்பெயர் கொண்டவர். தமிழ்நாட்டில் பாபா பக்தர்கள் அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர். அன்பிற்கும், பண்பிற்கும் இலக்கணமாகத் திகழ்பவர். சாயி சேவையையே தன் உயிர் மூச்சாக கொண்டவர்.

பாண்டிச்சேரி கமல சாயி கோவில் உட்பட, மூன்று பாபா ஆலயங்கள் உருவாக காரணகர்த்தாவாக இருந்தவர். கனடா போன்ற வெளிநாடுகளில் பாபா அமைப்புகளை ஏற்படுத்தி பாபா பக்தி மார்க்கம் வளர காரணமாக இருந்தவர்.

ஆசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் முழுமூச்சாக தமிழகம் முழுவதும்



சுற்றுப் பயணம் செய்து சாயி சேவை புரிந்தவர்.

தற்போது வயது முதிர்ந்த நிலையிலும் தனது பாண்டிச்சேரி இல்லத்தில், இன்றும் தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டு சாயி சேவையில் ஈடுபடுகின்றார். அவருக்கு சென்ற மாதம் நமது இதழின் சார்பாக **" பண்பின் சிகரம் "** என்ற விருது வழங்கி கவுரவித்திருந்தோம். (அவர் பகவான் சாயிநாதரின் அருளால் இன்னும் பலகாலம் ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்திருந்து, சாயி பக்தர்களுக்கு வழிகாட்டியாக வாழ்வாங்கு வாழவேண்டும் என்று பிரார்த்திப்போம்.)

குரு அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட உடன், பாபா மாஸ்டரே பேசியிருக்கின்றார். அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடந்த விபரங்களை கூறியிருக்கின்றார் குரு.

எல்லா விபரங்களையும் பொறுமையாக கேட்ட பாபா மாஸ்டர் அவர்கள் சரி, உங்கள் குழுவினருடன் இரயில் நிலையத்திலேயே இருங்கள். உங்களை அழைப்பார்கள் என்று கூறி போனை வைத்திருக்கின்றார்.

குருவிற்கு ஒரு வித நம்பிக்கை ஏற்பட்டாலும், முன் பின் தெரியாத எனக்கு முன்பின் தெரியாத ஊரில் யார் எப்படி நமக்கு உதவப் போகின்றார்கள் என்ற குழப்பத்தில் தொலைபேசியை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார்கள்.

மணி காலை 7 ஆகிவிட்டது. பேரூந்தை பார்த்து வரச் சென்ற குருவையும் காணவில்லை என்றவுடன் பக்தர்கள் கூட்டத்திற்குள், என்ன இவ்வளவு நேரம் ஆகிவிட்டது. பேரூந்தை பார்க்கச்சென்ற குருவையும் காணவில்லை. பேரூந்தும் வரவில்லை

என்ற சலசலப்பு துவங்கிவிட்டது.

ஆனால் பாபா மாஸ்டர் யாரிடம் என்ன பேசினாரோ குருவிற்கு தெரியாது. சரியாக அரை மணி நேரத்தில் குருவிற்கு ஒரு கால் வந்திருக்கின்றது.

அதில் நீங்கள்தானே ஸ்ரீராம். நான் சீரடியில் இருந்து பேசுகின்றேன். என் பெயர் குப்தா, உங்களுக்காக "சிரத்தா" என்ற பேரூந்து இரயில்நிலையத்திற்கு இன்னும் அரை மணி நேரத்தில் வந்து விடும். நீங்கள் அனைவரும் அதில் ஏறிக்கொண்டு சீரடியில் நீங்கள் தங்கும் இடத்திற்குச் செல்லுங்கள். மற்றவற்றை நேரில் பேசிக் கொள்வோம் என்றிருக்கின்றார்.

சொன்னது போல் அடுத்த அரை மணிநேரத்தில் சிரத்தா டிராவல்ஸ் என்ற பேரூந்து இரயில் நிலையத்திற்கு வர அனைவரும் அதில் ஏறிக் கொண்டு சீரடியை நோக்கி புறப்பட்டோம்.

ஆனால் இவை எல்லாம் பக்தர்கள் யாருக்கும் தெரியாது. பேரூந்து சீரடியை நோக்கி சென்று கொண்டிருக்கும்போது, நடந்த சம்பவங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டார் குரு,

மேலும், நமக்கு உதவிய குப்தா யார் என்று தெரியவில்லையே! நமக்கு உதவிய அவருக்கு நாம் எவ் வகையிலாவது உதவி செய்ய வேண்டும் என்றவாறு, பேரூந்தில் ஓட்டுநரிடம், உங்களுக்கு குப்தா அவர்களைத் தெரியுமா? என்று கேட்க, ஓட்டுனரோ நன்றாகத் தெரியும் என்று ஒரு பிரபலமான அறக்கட்டளையின் பெயரைக்கூறி, அவர்கள் நிர்வகிக்கும் தங்கும் விடுதியின் மேலாளராக இருக்கின்றார் என்று விபரம் கூறினார்

அதே நேரத்தில் திரு. குப்தா அவர்களே குருவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேரூந்தில் ஏறி விட்டீர்களா ஒன்றும் குறையில்லையே என்று விசாரிக்க, குரு அவருக்கு பதில் கூறிவிட்டு, அவருக்கு மிக்க நன்றி கூறினார்கள்.

தொடர்ந்து உங்களுக்கு நான் எந்த விதத்திலாவது உதவ வேண்டும் என்று நினைக்கின்றேன். நாங்கள் 50 நபர்கள் வருகின்றோம். நான் ஏற்கனவே முன் பதிவு செய்திருக்கின்ற விடுதிக்குப் பதில் உங்கள் விடுதிக்கு வந்து விடுகிறேன் எனக்கு 15 அறைகள் ஒதுக்கித் தரமுடியுமா? என்று கேட்க, அதற்கு திரு. குப்தா அவர்கள் தாராளமாக வாருங்கள். உங்களுக்கு எல்லா வசதியையும் நான் ஏற்படுத்தித் தருகின்றேன். என்று வரவேற்க, பேரூந்து திரு. குப்தா அவர்களின் விடுதியை நோக்கிச் சென்றது.

எங்களது பேரூந்து மதியம் 1 மணிக்கு விடுதியை அடைந்தது. அமர்நாத்தின் மோசடியால் பயணத்தின் திட்டம் மாறிவிட்டது. அதனால் பக்தர்களுக்கு மதிய உணவிற்கு இனிமேல் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறிக் கொண்டே வந்த குருவை எதிர் கொண்டு வரவேற்றார் திரு. குப்தா அவர்கள்.

தன்னை குருவிடம் அறிமுகப்படுத்தி கொண்டவர், உங்கள் குழுவினர் அனைவருக்கும் மதிய உணவு தயாராக இருக்கின்றது. முதலில் சென்று சாப்பிட்டுவிட்டு, பிறகு அறைக்குச் செல்லலாம் என்று அன்புக் கட்டளையிட, குருவோ சாயியின் லீலையை எண்ணி வியந்தவாறே அன்னக்கூடத்திற்குள் நுழைந்தார்.

- (தொடரும்...)

உடல் பருமனைக் குறைக்கும் தக்காளி!

இரத்தத்தைச் சுத்தப் படுத்தவும், இரத்த சோகை குணமாகவும் தக்காளி பயன்படுகிறது. சிறுநீரகத்தில் உள்ள கழிவுப்பொருள்கள் அனைத்தும் வெளியேறவும் இது பயன்படுகிறது. விஷப் பொருள்கள் இருந்தாலும் அவற்றையும் வெளியேற்றிச் சிறுநீரகங்களை புதுப்பித்துத் தருகிறது தக்காளிச் சாறு.

தக்காளி இரசம்;

பழுத்த பழத்தில்தான் நோய்த்தடுப்பு சக்தியைக் கொடுக்கும் வைட்டமின் 'சி' அதிகமாய் இருப்பதால், நன்கு பழுத்த தக்காளிப் பழத்தையே சாறாக மாற்றி உடனே அருந்த வேண்டும்.

சிறு நீர் எரிச்சல், மேக நோய், உடலில் வீக்கம், உடல் பருமன், நீரிழிவு, குடல் கோளாறுகள், கல்லீரல் கோளாறுகள் முதலியவை குணமாகவும் தக்காளிச் சாறு சிறந்தது. மேற் குறித்த நோய் உள்ளவர்கள் 5, 6 பழங்களைச் சிறிது தண்ணீர் விட்டு மிக்ஸி மூலம் சாறாக மாற்றி அருந்தினால் போதும்; நாக்கு வறட்சியும் அகலும்; உடலும் மினுமினுப்பாய் மாறும்.


100 கிராம் தக்காளிப் பழத்தில் கிடைக்கும் கலோரி 20 தான். எனவே, எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் பருமன் அதிகரிக்காது. பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் 'சி', வைட்டமின் 'ஏ' முதலியவை அதிக அளவில் உள்ளன. இதனால் உடலுக்குச் சத்துணவும் கிடைக்கும்.

உடல் பருமன் குறைய;

உடல் பருமனைக் குறைக்க விரும்புகிறவர்கள் காலைப் பலகாரமாய் பழுத்த இரு தக்காளிப் பழங்களைச் சாப்பிட்டால் போதும்.

தொடர்ந்து ஓரிரு மாதங்கள் இப்படிச் சாப்பிட்டால் கொழுத்த சரீரம் கட்டுப்படும். எடை கூடாது. காரணம், அதில் மாவுச்சத்து குறைவாய் இருப்பதுதான். அத்துடன் உடலுக்கு மேற்கண்ட தாது உப்புகளும், வைட்டமின்களும் கிடைத்து விடுகின்றன. இதனால் உடல் நலக்குறைவு ஏற்படாமல் உடல் பருமனைக் குறைக்கலாம்.

தக்காளி உடலில் உள்ள நோய்க்





கிருமிகளை முற்றிலும் அடித்து விரட்டுகிறது. அதனால்தான் உலகம் முழுவதும் விரும்பிப் பருகப் படும் பானங்களுள் தக்காளிச் சாறும் ஒன்றாய் இருக்கிறது. தக்காளிச் சாறு நீரிழிவுக்காரர்களின் சிறுநீரில் சர்க்கரையின் அளவைக் கட்டுபடுத்துகிறது.

பார்வை நன்கு தெரிய;

இரவு நேரத்தில் பார்வை சரியாகத் தெரியாதவர்கள் தக்காளிச்சாறு சாப்பிடவேண்டும். அப்போதுதே பறித்த தக்காளிச் செடியின் இலைகளை 15 நிமிடங்கள் சுடுதண்ணீரில் கொதிக்க வைக்கவும். பிறகு, வடிகட்டிய தண்ணீரில் ஒரு தேக்கரண்டி மட்டும் சாப்பிடவும்.

செடியின் தண்டை அரைத்து, அதில் வினிகரையும் கலந்து மார்புகளின்மீது வைத்துக் கட்ட வேண்டும். இதனால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

காய்ச்சலா? பித்த வாந்தியா?

காலையில் எழுந்ததும் ஏற்படும் காய்ச்சல், பித்த வாந்தி, கல்லீரல் ஆகியன தொடர்பாக ஏற்படும் மஞ் சள் காமாலை, மலச்சிக்கல், உணவு செரியாமை, வாயுத்தொந்தரவு, நெஞ் செரிச்சல் முதலியவை குணமாக ஒரு டம்ளர் தக்காளிச்சாறு போதும். காலையில் வெறும் வயிற்றில் தலா ஒரு சிட்டிகை உப்பு, மிளகுத்தூள் சேர்த்து இந்தச் சாற்றை அருந்த வேண்டும்.

ஆஸ்துமாவா?

காச நோய், நுரையீரல் நோய், ஆஸ்துமா போன்ற மூச்சுக் குழல் நோய்களும் இச்சாற்றால் குணமாகின்றன. இரவில் படுக்கப்போகும் போது ஒரு டம்ளர் தக்காளிச்சாறு மிக்ஸி மூலம் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதில தலா ஒரு தேக்கரண்டி தேனும், ஏலக்காய்த் தூளும் கலக்க வேண்டும்.

முதலில் மூன்று உரித்த வெள்ளைப்பூண்டுகளை மாத்திரை போல தண்ணீர் மூலம் விழுங்க

வேண்டும். பிறகு டம்ளரில் உள்ள தக்காளிச் சாற்றை அருந்த வேண்டும். மேற்கண்ட மூன்று வகை நோயாளிகளுக்கும் மிக உயர்ந்த நன்மையளிக்கும் சிகிச்சை முறை இது.

சளி முற்றிலும் அகன்றுவிடும். அதனால் இவர்கள் குணமாகிவருவதும் கண்கூடாய்த் தெரியும். தக்காளியைப் பழமாகச் சாப்பிட்டாலும் இரசமாகச் சாப்பிட்டாலும் உடனே உடலில் கலந்துவிடும். இதனால் சக்தியும் கிடைக்கும். உண்ட மற்ற உணவுகளும் உடனே செரிமானம் ஆகிவிடும்.

இந்தக் காரணத்தால்தான் பெரிய ஓட்டல்களில் முதலில் தக்காளி சூப் தருகிறார்கள். பலமான விருந்தை ருசித்துச் சாப்பிட, ஏற்கனவே வயிற்றில் உள்ளதை இது ஜீரணிக்கச் செய்துவிடும்.

அத்துடன் இது உடனே உடலால் கிரகித்துக் கொள்ளப்படுவதால் வயிறு நிரம்பிவிடும். எனவே உணவைக் குறைவாகவே உண்ணுவார்கள். அதாவது வயிற்றில் பாதியைத் தக்காளி இரசம் அடைத்துக் கொள்வதால் மிகுதியாகச் சாப்பிட முடியாது. ஓட்டலுக்கு இந்த முறையால் லாபமும் கிடைக்கும்.

பூண்டு, இஞ்சி, சீரகம், மிளகு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நல்லெண்ணெயில் தக்காளி சூப்பாகவும் அருந்தலாம். இந்த முறையும் உடலுக்கு நல்லதே. நோயின் போது ஏற்படும் நாக்கு வறட்சிக்கு இப்படித் தக்காளி சூப் மிகவும் நல்லது.

தக்காளியில் உள்ள இரும்புச்சத்து எளிதில் ஜீரணமாகிறது. அத்துடன் முழுமையாக உடலில் கலந்துவிடுகிறது. இதனால் இரத்த சோகை நோயாளிகள் விரைந்து குணமாகிறார்கள். இவர்கள் தக்காளிச்சாறை தினமும் அருந்த வேண்டும்.

<u>பார்வை நரம்புகள் பலம் பெற;</u>

வெண்ணெயில் உள்ளதைவிட அதிக அளவு வைட்டமின் 'ஏ' தக்காளிப் பழங்களில் இருக்கிறது. அதனால் கண் பார்வைக் கோளாறுகளுக்கும், உடல் பலவீனத்துக்கும் தக்காளிப் பழத்தையும், தக்காளிச் சாற்றையும் லண்டனின் உள்ள கைஸ் மருத்துவமனை (Guy's Hospital) நோயாளிகளுக்குத் தொடர்ந்து கொடுத்துக் குணப்படுத்தி வருகிறது. இதற்குத் 'தக்காளி வைத்தியம்' என்று பெயர்.

தக்காளி தென்னமெரிக்காவில் தோன்றியது. ஐரோப்பியர்களால் 'காதல் பழம்' என்று வழங்கப்படுகிறது. உலகில் அதிகம் விளையும் முதல் காய்கறி உருளைக்கிழங்கு, இரண்டாவதாக அதிகம் விளையும் காய்கறி தக்காளி.

பதப்படுத்தப்பட்ட தக்காளி சூஸ் உலகிலுள்ள அனைவராலும் விரும்பப்படுகிறது. தக்காளியுடன் துவரம் பருப்பு சேர்த்து பச்சடி செய்து சாப்பிடலாம்.

தக்காளிப் பழம் எங்கும் எப்போதும் மலிவாக கிடைக்கும் பழங்களுள் ஒன்று. அதை தினந்தோறும் உணவாகவும், சூப்பாகவும் பயன்படுத்தி சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை ஆரோக்கியமாக வாழலாம்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப தீகம்பரா"

"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு: **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –5

குருவைத் தேடி

மூலப்பொருட்களை எடுத்துவரும் லாரியின் ஓட்டுனர்கள், ஏதாவது ஒரு வகையில் என்னிடம் பாபாவைப் பற்றி பேசுவார்கள். சிலர் பாபாவின் பிரசாதம் என்று லட்டு, ரட்சை, உதி என்று கொண்டு வந்து தருவார்கள். இறுதியாக நீங்கள் சீரடிக்கு எப்போது வருகின்றீர்கள் என்று கேட்பார்கள்.

நான் சீரடிக்கு வரக்கூடாது என்று தான் இவ்வளவு பொறுப்புகளை என்னிடம் தந்திருக்கின்றார் பாபா. இதை விட்டுவிட்டு நான் சீரடிக்கு வந்தால் நான் கொடுத்த வேலையை விட்டுவிட்டு இங்கு ஏன் வந்தாய் என்று என்னைக் கேட்க மாட்டாரா என்று அவர்களை அப்போதைக்கு மடக்குவேன்.

பாபாவின் பிரசாதங்களை வீட்டிற்கு எடுத்துவந்து மனைவியிடம் தருவேன். அவர்கள் மிகவும் மகிழ்ந்து போவார்கள். இருப்பினும் எப்போது என்னை சீரடிக்கு கூட்டிச் செல்லப் போகின்றீர்கள் என்று கேட்பார்கள்.

வேலை அதிகமாக இருக்கின்றது அப்புறம் பார்க்கலாம் என்று கூறிவிடுவேன். அடிக்கடி இதன் சம்பந்தமாகவே எங்களுக்குள் மனஸ்தாபம் வர ஆரம்பித்தது. நீங்கள் என்னை என்ன சொல்லி இங்கு கூட்டி வந்தீர்கள். சென்னைக்கு வந்து விட்டால் சீரடி அருகில்தான் இருக்கின்றது. கூட்டிச் செல்வேன் என்றீர்களே என்பார் என் மனைவி.

அருகில் என்று ஒரு பேச்சுக்கு சொன்னேன். இங்கு வந்ததும் தான் தெரிகின்றது. சென்னையில் இருந்து சீரடி 1250 கி.மீட்டர் இருக்கின்றது என்று நான் என்ன செய்வது. சீரடி சென்றுவர ஐந்தாறு நாள் ஆகிவிடும். அவ்வளவு நாள் எல்லாம் அலுவலகத்தை விட்டு வரமுடியாது. அப்பறம் பார்க்கலாம் என்று தவிர்த்து விடுவேன்.


இப்போதெல்லாம் நீங்கள் முன்பு மாதிரி இல்லை. எப்போதும் பணத்தின் பின்னால் ஓடுகின்றீர்கள். முன்பெல்லாம் தவம், தியானம் என்று பேசிக்கொண்டே இருப்பீர்கள். இப்போது அதைப்பற்றி பேசுவதே இல்லை. நீங்கள் ரொம்பவே மாறிவிட்டீர்கள். பணம் இல்லாமல் நாம் வறுமையில் இருந்தபோது நான் உங்களுடன் இருந்தேன். இப்போதோ பணம் வந்தவுடன் உங்களிடம் நான் பேசுவதுகூட அரிதாகிவிட்டது. இந்த வாழ்க்கை வேண்டாம். வாருங்கள் நாம் திரும்ப ஊருக்கே போய்விடலாம் என்று கூற அரம்பித்துவிட்டார்.

அவரை சமாதானப்படுத்துவதற்காக மயிலாப்பூரில் பாபா கோவில் இருக்கின்றதாம். முதலில் அங்கு சென்று பாபாவை தரிசிப்போம். பிறகு சீரடி செல்லலாம். என்று முதன் முதலில் மயிலாப்பூர் ஆலயத்திற்கு கூட்டிச்சென்றேன்.

என் மனைவி, எனது குழந்தைகள் இருவருடன் ஆட்டோவில் ஏறி அமர்ந்ததும், திடீரென என்னுடைய

தலை வலிக்க ஆரம்பித்து. எனக்கு எப்போதும் வரும் மைக்ரேன் தலைவலி என்னடா இது சோதனை என்றவாறு தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு ஆலயத்திற்கு சென்று விட்டேன். அன்று வியாழக்கிழமை கூட்டம் அதிகமாக இருக்க,பல்லைக் கடித்து கொண்டு வரிசையில் நின்றேன்.

இந்த தலைவலி ஒரு பக்கமாக வரும் மைக்ரேன் வகை தலைவலி. எனது பத்து வயதில் இருந்தே நான் இந்த தலைவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். பலகாலமாக பல மருத்துவம் பார்த்து விட்டோம். தலைவலி நின்ற பாடில்லை. சீசன் நோய் போன்று வருடத்திற்கு மூன்று மாதம் என்னை பாடாய் படுத்தும்.



முதன் முதலாக, நானும் என் மனைவியும் ஐந்தரை அடி உயரம் உள்ள சிலைவடிவ பாபாவை அப்போதுதான் பார்க்கின்றோம். அவரை பார்த்து தொட்டு காலில் விழுந்து வணங்கிவிட்டு வரும்வரை எந்தவித உணர்வும் ஏற்படவில்லை.

என் மனைவி பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கும் போது பாபாவின் கழுத்தில் இருந்த பெரிய மாலை ஒன்று நழுவி என் மனைவியின் கழுத்தில் விழ, அர்ச்சகர் அதை அப்படியே எடுத்துக் கொள்ளுமாறு கூற என் மனைவி ஆனந்தத்துடன் என்னைப் பார்க்க, நான் அதை கூட பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எதார்த்தமாக நடந்ததை எல்லாம் அதிசயமாக எடுத்து கொள்கின்றார்கள் என்று நினைத்தவாறு வெளியே வந்து விட்டேன்.

சற்று தூரத்தில் வந்தவுடன் என் மனதில் இதைத்தான் நினைத்தேன் உன்னைப்பற்றி ஏதேதோ பெருமையாக கூறுகின்றார்கள். சாதாரண தலைவலி, அதை நிறுத்த முடியவில்லை. என்ன பெரிய சாமி, கடவுள் என்றவாறே மனதிற்குள் நினைந்து கொண்டேன்.

வெளியே வந்த உடன் வாருங்கள் வீட்டிற்கு போகலாம் எனக்கு தலைவலி தாங்க முடியவில்லை என்று அவசரப்பட்டேன். என் மனைவியோ ஒரு ஐந்து நிமிடம் பிரசாதம் வாங்கிக்



கொண்டு போகலாம் என்றார். நானும் வேண்டா வெறுப்பாக பிரசாதம் வாங்கச் சென்றேன்.

அன்று பொங்கல் பிரசாதம். தொன்னை நிறைய பொங்கலை வைத்து என் கையில் வைத்தார் சேவகர். பொங்கலில் இருந்து வழிந்த எண்ணை என் கைகளை நனைத்தது. ஒற்றை தலைவலியான மைக்ரேன் வகை தலைவலிக்கு எண்ணை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அதைப் பார்த்ததும் இதையா நாம் சாப்பிட வேண்டும் என்றவாறே என் மனைவியிடம் நீட்ட, இல்லை, இல்லை, பாபா பிரசாதம் சாப்பிடுங்கள் என்று வாங்க மறுத்துவிட்டார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

பிரசாதம் வாங்கிய பக்தர்கள் அதை ருசித்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். கீழே போடவும் மனம் இல்லை. சரி இன்று ஒரு நாள் சாப்பிடுவோம் என்றவாறே சாப்பிட ஆரம்பித்தேன். பொங்கல் எனக்குள்ளே போகப் போக எனக்குள் என்னவோ மாற்றம். தலைவலி மெதுவாகக் குறைகிறது. இரண்டு நிமிடத்தில் நான் சாப்பிட்டுவிட்டேன். அதே இரண்டு நிமிடத்தில் என் தலைவலி தீர்ந்து விட்டது. மாத்திரை போட்டல்கூட பத்து நிமிடம் ஆகும்.

நான் வேக வேகமாக கைகளைக் கழுவிக்கொண்டு, மீண்டும் பாபாவின் முன்னால் சென்று அமர்கின்றேன். என்னருகே வந்து என் மனைவியும் குழந்தைகளும் அமர்கின்றனர். என்னவோ தெரியவில்லை இப்போது பாபாவை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கின்றது. கண்களை மூடி தியானிக்கின்றேன். கண்களில் இருந்து கண்ணீர் சாரை சாரையாக கொட்டுகின்றது.

பாபா எங்கள் வீட்டிற்கு வந்து பல ஆண்டுகள் ஆயிற்று. ஆனால் இப்போதுதான் நான் அவரை சரியாகப் பார்க்கின்றேன். எங்கோ காணாமல் போன நண்பர் திடீரென வந்தால் ஒருவிதமான ஏக்கத்தில் கூடிய அழுகை விம்மும். இது வேறு வகை ஒரே வீட்டில் இருந்து கொண்டே முகம் பார்த்து பேசாமல் இருந்துவிட்டோமே என்ற ஆற்றாமையால் வரும் அழுகை.

யார் நீ? எப்படி உன்னை கவனிக்காமல் போனேன்! என்ன ஆனது எனக்கு. வந்த வேலை அறியாது சொந்த வேலை செய்தது ஏன்? நான் யாரென்று சுட்ட வந்த நீ யாரப்பா, நீயே எனது சற்குருவோ என்றெல்லாம் என் மனதிற்குள் பெரிய பிரளயமே ஏற்பட்டது.

இவை எல்லாம் மறுநாள் காலையில் அலுவலகம் செல்லும்வரை தான் இருந்தது. அலுவலகம் சென்றபின் என்னால் எதையுமே சிந்திக்க முடியவில்லை. ஆனால் அந்த சம்பவத்திற்குப் பின்னால் எனக்கு ஒரு பக்க தலைவலி வந்ததே இல்லை.

ஆனால் உண்மையில் நான் இங்கு எதற்காக வந்தேன், இங்கு என்ன செய்துகொண்டிருக்கின்றேன் என்பதை மறந்துதான் போனேன். செல்வமும், புகழும் ஆன்மீகத்தை அடைவதற்கு பெரும் தடைகள் என்பது எனக்கு அப்போது புரியவில்லை.

எட்டு ஆண்டுகள் செல்வத்தின் உச்ச நிலையை எனக்கு காட்டியருளிய பாபா, அதன்பின்பு அதன்மீது எனக்கிருந்த ஆசையை அகற்றும் லீலையை ஆரம்பித்தார். அதன் முதல் படிதான் என் தலைவலியை குணப்படுத்தியது என்று நம்புகிறேன்.

13 வயதில் இருந்து என்னைப் பின்தொடர்ந்த ஆன்மீக செல்வத்தை விட்டுவிட்டு, நிலையற்ற பொருட் செல்வத்தின் மீது மோகம் கொண்டு,

என் வியாபாரத்தினை விரிவு படுத்தும் பொருட்டு, மகாராஷ்டிர மாநில அரசின் விவசாய விளை பொருட்கள் நலவாரிய அமைப்பான "அம்மா" வில் இணைந்து தமிழக அரசுக்கு உணவுப் பொருட்கள் வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டேன்.

அதன்படி எனக்கு உதவி செய்ய மகாராஷ்டிர அரசு ஜெகதீஷ் என்ற அதிகாரியை அனுப்பினார்கள். ஜெகதீஷ் மத்திய பிரதேசம் போபாலைச் சேர்ந்தவர். என்னைவிட வயது குறைவானவர். எனக்கு ஹிந்தி தெரியாது, அவருக்கு தமிழ் தெரியாது. எப்படி அவருடன் தொடர்பு கொள்ளப் போகின்றேன் என்று சற்று கலவரத்தில் இருந்தேன். ஆனால் ஜெகதீஷ் நிகழ்கால இளைஞனாக இருந்தாலும், யோகம், தியானத்தின் மீது ஆர்வமாக இருந்தார்

அலுவலகத்திற்கு வந்த முதல் நாளிலேயே எனக்கு அவரை மிகவும் பிடித்துப் போனது. ஏன் என்றால் அவரது மடிக்கணினி மீது ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தருடைய படம் ஒட்டப்பட்டிருந்தது. அந்நாளில் மடிக்கணினி என்பது அபூர்வமாக இருந்தது. நிறைய படித்தவர்களும், தொழிலதிபர்களுமே, அதை பத்திரமாக பயன்படுத்துவார்கள்.

அவர்களுக்கு விஞ்ஞானத்தின் மீதும், பொருளின்மீது மட்டுமே ஆர்வம் அதிகம். ஆகையால் மடிக்கணினியை பொத்தி பொத்தி பாதுகாப்பார்கள். இவர் ஒரு யோகியின் படத்தை அதில் ஒட்டியிருப்பது, எனக்கு அவர் மெய்ஞானத்தை மதிக்கின்றார் என்பதை புரிய வைத்தது. ஜெகதீஷ் ஆன்மீகத் தேடலில் இருக்கிறார் என்பதையும் உணர்ந்து கொண்டேன். அடுத்து நான் பார்த்த காட்சி என்னை அதிர்ச்சியடையச் செய்தது.

அவர் கணினியை மேசையில் மீது வைத்துப் பிரிக்க, அதன் கீ போர்டின் மீது சின்னதாக ஒரு சுவாமியாரின் ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. நான் உடனே அதை கூர்ந்து கவனித்தேன். எனக்கு ஆச்சரியமாக போய் விட்டது. அது


எனக்கு 13 வயதில் தீட்சை அளித்த "காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர்" ஸ்ரீ இராமாசாதுவினுடைய புகைப்படம்.

சட்டென்று எனக்குள் எதுவோ விழித்துக் கொண்டது. "ஊர் ஊரா சுத்தப்போறே, சுத்து, சுத்து, சுத்துனாத்தான் அடங்கும், குருவும் கிடைக்கும்" என்று என்னைப் பார்த்து திக்கி, திக்கிக் கூறிய குரல் என் காதில் ஒலித்தது. தொடர்ந்து, நீ எங்கிட்டே இருக்காதே, எங்கிட்டே இருந்து என்னைப் போலவே செராக்ஸ் ஆகிடாதே, என்ற மகரிஷியின் குரலும், நான் இல்லே உன் குருநாதன். தூரத்துல இருக்கான். தேடு தேடு கிடைப்பான் என்ற இராம் சூரத் குன்வர் அவர்களின் குரலும் எனக்குள் டமாரமாய் ஒலிக்க எனக்கு சட்டென்று தலையைப் பிளப்பது போன்ற வலி. தலையை இரண்டு கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஜன்னலை நிமிர்ந்து பார்க்கின்றேன்.

அவர் என்ன பிரச்சனை, ஏன் ஒரு மாதிரி ஆகிவிட்டீர்கள். என்று என்னை பிடித்து உலுக்க, நான் அவரின் தோளிலேயே சாய்ந்து மயக்கமானேன்.

சுமார் நான்கு மணிநேரத்திற்குப் பிறகு கண்களை திறந்தேன். ஆனால் தலைவலி விட்டபாடில்லை. மெதுவாக சற்று சுதாரித்துக் கொண்டு, என் பீரோவில் இருந்து எனது டைரியை எடுத்து அதில் இருந்த ஸ்ரீ இராமாசாது அவர்களின் பெரிய சைஸ் புகைப்படத்தை அவரிடம் காட்ட, இப்போது அவரும் திடுக்கிட்டார்.

இந்த புகைப்படம் உங்களிடம் இருக்கின்றதே! இவர் யார், எங்கு



இருக்கிறார். என்று பல கேள்விகளை அடுக்க, அப்போது இவர் யார் என்று உங்களுக்கு தெரியாதா? என்றேன்.

எனக்குத் தெரியாது. ஆனால் எனது தந்தை இவரை தனது குரு என்று கூறுவார். வீட்டில் நீங்கள் காட்டியதைப் போன்று இவரது புகைப்படத்தை நான் பார்த்திருக்கின்றேன். ஒரு முறை என் தந்தை தமிழ்நாட்டிற்கு சுற்றுலா சென்ற போது கும்பகோணத்தில் இவரைப் பார்த்து சாதாரண சாமியார் என்று நினைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டாராம். பின்பு அவரை மறந்து போயிருக்கின்றார்.

சிலகாலம் கழித்து ஓர் நாள் இரவு போபால் நகரில் ஒதுக்குப் புறமான தனக்கு சொந்தமான வீட்டில் மனைவி, 5 வயது மகனாகிய என்னுடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த போது. இரவு 12 மணியளவில் கதவு தட்டப்பட்டு இருக்கின்றது.

கதவைத் திறந்தால் வாசலில் சுவாமிகள் நின்றிருக்கின்றார்.

அவரைப் பார்த்தவுடன் என் தந்தைக்கு கும்பகோணத்தில் பார்த்த சுவாமிகள் என்று நினைவு வந்துவிட்டது. எனவே வாருங்கள் சுவாமி, வாருங்கள் என்று வரவேற்றிருக்கின்றார். ஆனால் சுவாமிகளோ, பரவாயில்லை. நான் சொல்வதை முதலில் கேள். பேராபத்து சூழ்ந்திருக்கின்றது. முதலில் இங்கிருந்து வெளியேறி தமிழ்நாட்டிற்கு சென்றுவிடு. போ, போ தாமதிக்காதே என்றவாறே வேகமாக வெளியேறிச் சென்று விட்டாராம்.

என் தந்தை இதை நம்புவதா, வேண்டாமா, என்று தயங்கியபடி நின்றபோது, யூனியன் கார்பைடு ஆலையில் இருந்து அபாய சங்கு ஒலித்திருக்கின்றது. உடனே ஆபத்தை புரிந்து கொண்ட என் தந்தை உடனடியாக என்னையும், என் தாயையும் காரில் ஏற்றிக்கொண்டு தமிழ்நாட்டை நோக்கி விரைந்ததால் 25000 பேர்களை பலி கொண்டு உலகையே உலுக்கிய போபால் விஷவாயு விபத்தில் சிக்காமல் நாங்கள் உயிர் தப்பினோம்.

அன்றிலிருந்து சுவாமிகளின் படம் எங்கள் குடும்பத்தினர் அனைவரிடமும் ஏதாவது ஒரு வகையில் இருக்கும் என்ற ஜெகதீஷ் சுவாமிகளை உங்களுக்கு எப்படி தெரியும், நான் சுவாமிகளை பார்க்க முடியுமா? என்று கேட்டார்.

சுவாமிகள் சமாதியடைந்து விட்டார் என்பதை கூறி, சுவாமிகளுக்கும், எனக்கும் உள்ள தொடர்பை பற்றி விளக்கி கூறிவிட்டு, சுவாமி யோகானந்தருடன் எனக்குண்டான ஒரு தொடர்பை பற்றிக் கூறலானேன்.

– (தொடரும்...)

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

தொடர் –15

சாய் சரவணன்

"அதி தேவதை"

துவாரகாமாயியில் பாபாவின் பக்தர்கள் இளம் விதவையான இராதாகிருஷ்ணமாயியைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஒரு சில பக்தர்கள் அன்னையை பாராட்டவும் செய்தனர். சிலரோ, பொறாமைப்படவும் செய்தனர். இப்படிப்பட்ட நிலையில் நம் சாயிநாதர்,

இராதாகிருஷ்ணமாயியை பார்த்து நீ இங்கேயே இருக்கலாம் என்றார். பாபாவின் பக்தர்கள் அன்னையை எங்கே தங்க வைப்பது என விவாதித்தனர். உடனே சாயிநாதர்,

இராதாகிருஷ்ணமாயி சாலாவில் தங்கியிருக்கட்டும் என ஆணையிட்டார். சாலை என்றால் பள்ளிக்கூடம் என்று பொருள்படும். இந்த சாலா என்னும் இடம் தற்போது சாவடிக்கு எதிரில் இருக்கும் அப்துல் பாபாவின் வீட்டிற்கு பின்புறமாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

சாயிநாதரால் இராதா கிருஷ்ணமாயிக்கு தங்குவதற்காக தரப்பட்ட இடமான இந்த " சாலா" வைப் பற்றி பாபா, வாமன்ராவிடம் கூறியதாவது. வாமன், நீ அடிக்கடி இந்த துவாரகாமாயிக்கு வரவேண்டாம். உனக்கு தேவையான ஞானம் சாலாவில் தாராளமாக கிடைக்கும். அந்த இடம் இரத்த மாமிசங்கள் ஆன இடம் அல்ல. மனித உருளைக் கடந்து உள்ளே இருக்கும் ஆன்மாவைத் காணும் இடம். அங்கே போனவருக்கு அவருடைய இதயம் விசாலமாகும். எனக்கூறினார்.

இந்த சாலா வில் இராதாகிருஷ்ணமாயி வாழ்ந்த மகத்துவத்தை நாம் வரக்கூடிய அத்தியாயங்களில் காணலாம். சாயிநாதருடைய உத்தரவின்பேரில்

இராதாகிருஷ்ணமாயி சாலாவில் வந்து தங்கினாள். அந்த சாலா, பத்துக்கு பத்து அகலமும், மூன்று பக்கம் மட்டுமே சுவர்களையும் உடைய சிறு குடிசையாகும். அந்த குடிசையில் சுற்றி செடி கொடிகளும் படர்ந்து கிடந்தன. நானா சாஹேப் சாந்தோர்கரும், லட்சுமி பாயும் இராதாகிருஷ்ணமாயியை சாலாவில் கொண்டு விட்டனர்.

பாபாவால் தனக்கு தரப்பட்ட சிறு குடிசையை சுத்தம் செய்து மாட்டுச் சாய்த்தால் மெழுகி, கோலம் போட்டு சரி செய்து கொண்டாள். இத்தனை வருட தவத்தின் பயனாக கிடைத்த ஸ்ரீ சாயிநாதரை மனதார தரிசனம் செய்து ஆனந்தமாய் ஆனந்தமாய் அக்கட்டுரையில் வசிக்கலானாள்.

குடிசைக்குள்ளேயே சிறிய பூசை அறையை உருவாக்கி, விட்டலனையும், கிருஷ்ணனனையும் எழுந்தருளச் செய்து, கண்களை மூடி ஆசனத்தில் அமர்ந்து, சத்குருவான ஸ்ரீ சாயி விட்டலனது சுந்தர ரூபத்தை தியானம் செய்தபடி காலத்தை கழித்தாள்.

சாயிநாதர் எப்போதும் இரவு பகல் பாராது தம் அடியவர்களின் நலன்களிலும், கவனம் செலுத்தியபடி துவாரகாமாயியில் இருந்தார்.

இராதாகிருஷ்ணமாயியின் பிரேம பக்தியையும், தவ வாழ்க்கையையும் கருத்தில் கொண்டு, தன் ஆத்மாவை

தன்னிடம் ஒப்படைத்து, தன்னோடு இரண்டறக் கலந்து நிற்கும் பிரேம பக்தையான இராதாகிருஷ்ண மாயியை கொண்டு குருபகவானின் மேன்மையையும், சரணாகத பக்தியின் சக்தியை உலகத்திற்கு உணர்த்த வேண்டி ஸ்ரீ சாயிநாதர் ஓர் சங்கல்பம் கொண்டதன் வாயிலாகத் தான் இராதாகிருஷ்ணமாயியை தன்னிடம் இழுத்துக் கொண்டார்.

அன்று அதிகாலை வேலையில் சா யிநாதர் தன்னை மசூதிக்கு அழைப்பதாக உள் உணர்வில் உணர்ந்து கொண்ட அன்னை என் விட்டலன் அழைக்கின்றான் என்று ஒரு லாந்தர் விளக்கை எடுத்துக் கொண்டு துவாரகாமாயிக்கு வந்தாள். அங்கே சாயி துவாரகாமாயின் படிக்கட்டு களில் அமர்ந்திருந்ததைக் கண்ட அன்னை அவரை ஓடி வந்து நமஸ்கரித்தாள்.

பரப்பிரம்மமான சாயிநாதரின் சுயப்பிரகாசத்தின் ஒளிக்கீற்று துவாரகாமாயி எங்கும் பரவி நிறைந்திருப்பதால் கண்டாள். அந்த பேரொளியில் உலகம் மறைந்து, அன்னையின் கண்களுக்கு துவாரகாமாயி மட்டுமே தெரிந்தது. பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட ஓர் ஒளி பொருந்திய இடமாக துவாரகாமாயி யைக் கண்டாள்.

அங்கே புன்னகை தவழும் முகத்தி னோடு ஓர் பாறை மேல் அமர்ந்திருப்பதை அன்னை கண்டாள். அப்போது பாபா, வா, இராதாகிருஷ்ணி என் அருகில் வா,என்று அழைத்தார். அன்னை இறைப்பேருணர்வில் கலந்து பாபாவின் அருகில் சென்று அவரின் பாதங்களில் பணிந்து திருவடிகளை பிடித்துவிட ஆரம்பித்தாள்.

அன்னை பாபாவை விட்டலனாகவே பாவித்து இந்த திருவடிகள் தானே மூன்று உலகையும் அளந்தது. இந்தத் திருவடிகளில் தானே சர்வமும் அடங்கியுள்ளது. இந்த திருவடியில் தானே,எங்களைப் போன்ற பக்தர்களை சேர்த்துக் கொண்டு



பிரம்மானந்தத்தை அனுபவிக்கும் படி செய்கின்றீர். என துதித்துக்கொண்டே பாத சேவை புரிந்தாள் அன்னை.

சாயிநாதராகிய விட்டலன் அன்னையை அருகே அழைத்து அவளது காதில் உபதேசம் செய்யும் காட்சி தோன்றி மறைந்தது. அன்னை கண்களை கசக்கிக் கொண்டு பார்த்தாள். அங்கே துவாரா காமாயி படிகளில் பாபா அமர்ந்தபடி இருந்தார்.

அன்னையோ, விட்டலனே சாயிநாதராக வந்து விளையாடுகின்றான் என எண்ணியவாறே பிரேமையுடன் பாபாவை தரிசித்தாள்.

அப்போது சாயிநாதர் அன்னையைப் பார்த்து, "நீ அவதரித்ததின் நோக்கம் நிறைவேறட்டும். உனது பணிகளைத் தொடங்கி, குருபகவானின் மேன்மையையும், சரணாகத பக்தியின் சக்தியையும், இவ்வுலகம் உள்ள வரை அறியட்டும்" என்று கூறி ஆசிர்வதித்தார்.

உடனே இராதாகிருஷ்ணமாயி மீராவின் பாடல்களைப் பாடிக் கொண்டே ஆடத் தொடங்கி விட்டாள். பாபாவை அவளின் தூய்மையான பிரேமை எனும் உணவை உட்கொண்டார். இறுதி யில் அன்னை பாபாவை பார்த்து, " பிரபு தாமே என் விட்டலன். தாம் வாழும் சீரடியே எனது பண்டரிபுரம். என்றாள்" சாயிநாதரோ,

"நீ எப்போது சீரடியில் விட்டலனைக் கண்டாயோ அப்பொழுதே சீரடி பண்டரிபுரம் ஆனது. இனி விட்டலன் சீரடியிலும் தங்கியிருப்பான்" எனும் வாக்கை இராதாகிருஷ்ணமாயிக்கு தந்தார். பாபாவின் ஆசியைப் பெற்றவள் பிரியாவிடை பெற்று தன் இருப்பிடமான சாலாவிற்குத் திரும்பினாள்.

குருவின் மத்தியில் உலகம் நிலை பெற்றுள்ளது. உலக மத்தியில் குரு



நிலை பெற்றுள்ளார். குருவே உலகமும் இருக்கின்றார். அந்த குருநாதருக்கு என் நமஸ்காரம்.என்று பரமேஸ்வரன் குருகுலத்தில் கூறுகின்றார். நமக்கு பகவானின் அருள் இருந்தால் மட்டுமே, அகலத்தில் நமது மிகச்சிறந்த உறவு குரு மட்டுமே என்பது புரிய வரும். எல்லா தர்மங்கள் ஆத்மார்த்தமான விளங்குபவர் சற்குரு ஆவார்.

ஆனந்தமயமான ஸ்ரீ சாயிநாதரை, நாம் இப்பிறவியில், அவர் அருளால் அவரை வணங்கும் பாக்கியம் பெற்றோம். பரம் பொருளான சமர்த்த ஸ்ரீ சாயிநாதரை இந்த அகிலத்திற்கே தம் குரு பக்தியால் அடையாளம் காட்டித்தந்த சிறந்த வழி காட்டியை சாயி பக்தர்கள் ஆகிய நாம் மறந்து போவது சரியா? அந்த சிறந்த வழிகாட்டியின் குருபக்தி சீரடியில் அன்று மறைக்கப்பட்டாலும், இன்று குருவின் அருளால் இக்காவியத்தின் வழியாக உயிர்

பெறும். தன் பக்தியின் பெருமையில் பகவான் சாயிநாதரே வெளிக்கொண்டு வருகின்றார்.

சாலா விற்கு திரும்பிய இராதாகிருஷ்ண மாயி தன் பிரபுவான விட்டலனே இங்கு சாயிநாதனாக இருக்கின்றான் என்பதை கண்கூடாகக் கண்டாள். அவர் வாழும் சீரடியையே, பிருந்தாவனமாக நினைத்துக் கொண்டாள். மேலும் சாயிநாதர் தன் நியமபடி பிச்சை எடுக்கச் செல்லும் போது இராதாகிருஷ்ணமாயி அந்தக் காட்சியைக் கண்டாள். அன்னையின் திருஷ்டியில் அன்று வெண்ணை திருடும் கிருஷ்ணன், இன்று சீரடியில் வீடுவீடாக சென்று பிச்சை எடுத்து உண்பதையும் கண்டாள்.

இவ்வாறாக பலவிதமாக, சாயிநாதரே ஸ்ரீ விட்டலன் என்ற உறுதியான நம்பிக்கை தன்னுள் இருந்தாலும், இந்த உண்மையை இந்த உலகம் உணரும் பொருட்டு, முதலில் தான் வசிக்கும் சாலா வை பிருந்தாவனமாக மாற்ற முடிவெடுத்தாள். தன் இருப்பிடத்தை சுற்றி உள்ள இடங்களை சுத்தப்படுத்தினாள். பிறகு சாலாவை சுற்றிலும் துளசி செடிகளை நட்டு வளர்க்க ஆரம்பித்தாள்.

சாயிநாதர் துவாரகாமாயியில் ஒரு துளசி மாடத்தை தயார் செய்து அதில் துளசி செடியை வளர்த்து சீரடியில் பிருந்தாவனம் உருவாகப் போவது முன்னரே அறிவித்தார் அல்லவா? அதன்படி இராதாகிருஷ்ணமாயியின் இருப்பிடம் முழுவதும் துளசி வனத்தால் நிரம்பியது. துளசியை பிருந்தா என்று அழைப்பர்.

இறுதியில் சாலா பிருந்தாவனமாக மாறியது. அந்த பிருந்தாவனத்தில் நாயகனாக ஸ்ரீ சாயிநாதரை அன்னை பாவித்தாள். அன்னை சாயிநாதரை தன் கைகளினாலே ஓவியம் வரைந்து முத்து மணிமாலைகளால் அலங்கரித்து, தன் பூஜை அறையில் வைத்து நித்திய வழிபாட்டை தொடங்கினாள்.

ஒரு முறை நானா சாயிநாதரைக் காண துவாரகாமாயிக்குச் செல்ல பாபா நாசாவின் இவ்வாறு கூறினார். நானா, என் நெருங்கிய பக்தர்களை,ஆன்மீகப் பாதையில் விரைவாக அழைத்துச் செல் லவே இராதாகிருஷ்ணமாயியை இங்கு வரவழைத்தேன். என்றார்.

- (தொடரும்...)

உண்மை

உண்மையான துறவி என்பவர்கள் தான் ஒரு துறவியென்பதையே அறியாதவர்கள் ஆவார்கள். ஆனால் தற்போது, பழிபாவம் புரிகிறவர்கள் தாம் தங்களைத் துறவிகளாய்

அறிகின்றனர். பாவிகள் மட்டுமே அப்படி அறிகின்றனர். உண்மையிலேயே நன்னடத்தை உள்ள ஒருவன் தான் நல்லவன் என்பதை அறிந்திருப்பதில்லை. மோசமானவர்கள் மட்டுமே தங்களை நல்லவர்களாய் எண்ணிக் கொள்கின்றாரகள்.

ஒரு நோயாளிதான், நோயினால் பாதிக்கப்பட்டவன் தான் ஆரோக்கியத்தைப் பற்றி எண்ணத் தொடங்குவான். நீங்கள் ஆரோக்கியமாய் இருக்கும் போது ஆரோக்கியமானவர்தான்.

உண்மையில் நீங்கள் ஆரோக்கியமாய் இருக்கும்போது ஆரோக்கியத்தைப் பற்றி நினைவு கொள்வதே இல்லை, நோயுற்ற நிலையில் தான் உடம்பு நினைவுக்கு வரும். ஆரோக்கியத்தைப் பற்றி ஒருவர் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தால் அவர் நோயாளி என்று நீங்கள் தெரிந்த் கொள்ளுங்கள்.

சென்னையைப் புனித மண்ணாக மாற்றிய 9 மகான்கள்



சென்னைக்கு மிகத் தொன்மை யான ஆன்மிக வரலாறு உண்டு. சோழர்களும், பல்லவர்களும் ஏராள மான கோயில்களை இந்த மண்ணில் நிர்மானித்தார்கள். ஏராளமான மகான்கள் இந்த மண்ணில் பிறந் திருக்கிறார்கள். எங்கோ பிறந்த மகான்கள், இங்கு வந்தும் ஜீவசமாதி அடைந்திருக்கிறார்கள். அப்படியான 9 மகான்களைப் பற்றிய தரிசனம் காண்போம் வாருங்கள்.

கலிய நாயனார்

கலிய நாயனார் 8ம் நூற்றாண்டுக்கு முன்னர் பிறந்தவர். இவர் பிறந்த ஊர் திருவொற்றியூர். தினமும் திருவொற்றியூர் தியாகராஜ பெருமா னுக்கு விளக்கேற்றும் கைங் கரியத்தைச் செய்து வந்தவர் கலிய நாயனார். இதனால் செல்வம் முழுக்க கரைந்தது. மனம் கலங்கிய கலிய நாயனார், தனது திருவிளக்குச் சேவையைத் தொடர எண்ணி எண்ணெய்க்குப் பதில் தன் ரத்தத்தை ஊற்றி விளக்கேற்ற முனைந்து ஈசனோடு கலந்ததாக இவரது வரலாறு கூறுகிறது.இவர் முக்தி பெற்ற இடம் திருவொற்றியூர் ஆகும்.

மூர்க்க நாயனார்

மூர்க்க நாயனார். எட்டாம் நூற்றாண்டுக்கு முந்தியவர்.இவர் சென்னை திருவேற்காட்டில் பிறந்தவர்

எந்த சூழலிலும் இறை அடி யார்களுக்கு உணவிடுவதை நிறுத்தாதக் கொள்கை கொண்டவர். செல்வம் எல்லாம் இழந்தபிறகும் சூதாடி பெற்ற பொருளைக்கொண்டு அடியார் களுக்கு அமுது படைத்தவர். கோபத் தில் ஆழ்ந்து போகக்கூடியவர் என்பதால் மூர்க்க நாயனார் என்று

அழைக்கப்படுகிறார். கார்த்திகை மாத மூல நட்சத்திர நாளில் இவரது குருபூஜை கொண்டாடப்படுகிறது.

இவர் முக்தி பெற்ற ஸ்தலம் கும்பகோணம்.

வால்மீகி முனிவர்

கி.மு. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த தவர் வால்மீகி முனிவர் இவர் பிறந்தது உத்தப்பிரதேசத்தின் கான்பூர் அருகே உள்ள பித்தூர் என்று சொல்லப்படுகிறது. இவர் ராமாயணம் எழுதியதோடு மட்டும் இல்லாமல் ராமரின் பிள்ளைகளான லவன், குசனை தனது ஆசிரமத்தில் வளர்த்தார் என்றும் கூறப்படுகிறது.

சிவபக்தி கொண்ட வால்மீகி முனிவர் தனது இறுதிக்காலத்தில் புற்றில் இருந்த சிவனை வணங்கி முக்தி அடைந்தார் என்றும், அவர் முக்தி பெற்ற இடம் திருவான்மியூர் என்றும் சொல்லப்படுகிறது. வான் மிகியூரே பிற்காலத்தில் திருவான்மியூர் ஆனது, கிழக்கு கடற்கரை சாலையில் இவருக்கு தனிக்கோயில் உள்ளது.

முக்தி பெற்ற இடம் திருவான்மியூர்.

பாம்பன் ஸ்வாமிகள்







முருகனை நேரில் தரிசித்தவரான இவர் ராமேஸ்வரத்தில், 1848ம் ஆண்டு பிறந்தார். பிரப்பன்வலசை என்ற இடத்தில் நிஷ்டையில் இருந்த இவருக்கு முருகப்பெருமான் காட்சி தந்து அருள் செய்தார். ஆன்மீக குருவாகவும், கவிகள் இயற்றும் புலவராகவும் எண்ணற்ற மக்களுக்கு வேண்டியதை அருளும் ஞானியாகவும் விளங்கி வருகிறார். இவர் 1929 ஆம் ஆண்டு திருவான்மியூரில் முக்தி பெற்றார்.

சக்கரை அம்மாள்

சக்கரை அம்மாள் 1854ம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அருகேயுள்ள தேவிகாபுரத்தில் பிறந்தார். இளம்வயதிலேயே கணவனை இழந்து துன்பப்பட்ட அனந்தாம்பாள்





என்ற சாமானியப்பெண், ஞானியர்கள் தொடர்பால் பல சக்திகள் பெற்று தெய்வ நிலையை அடைந்தார்.

ஸ்ரீ சக்கர வழிபாட்டை செய்ததால் சக்கரத்தம்மாள் என்று அழைக்கப் பட்டார். அதுவே நாளடைவில் சக்கரை அம்மாள் என்று மருவியது. முக்தி பெற்ற இடம் சென்னை திருவான்மியூர்.

பேயாழ்வார்

பேயாழ்வார் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தியவர் என்கிறார்கள். சரியான காலகட்டம் சொல்லப்படவில்லை

மயிலாப்பூர் கச்சேரி சாலை அருகே இவர் பிறந்தார். திருமாலின் நந்தகம் என்ற வாளின் அம்சமாக பிறந்த முத லாழ்வார்களில் முக்கியமானவர் பேயாழ்வார். மூத்தப்பாசுரமான மூன் றாம் திருவந்தாதியைப் பாடியவர் இவர்.

பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் காலத்தில் வாழ்ந்தவர். இந்த மூவரும்தான் நாலாயிர திவ்ய பிரபந்த பாடல்களை ஆரம்பித்து வைத்த பெரியோர்கள். முக்தி பெற்ற இடம் சரியான இடம் அறியப்படவில்லை.

வாயிலார் நாயனார்

வாயிலார் நாயனார். எட்டாம் நூற்றாண்டுக்கு சேர்ந்தவர்.

சென்னையில் மயிலாப்பூரில் பிறந்தவர். சுந்தரரின் திருத்தொண்டத் தொகையும், பெரியபுராணமும் போற்றிய நாயன்மார் இவர். சிவனைத் தியானித்து சிறப்பான பேறுபெற்றவர். கபாலீஸ்வரர் ஆலயத்தில் இவருக்குத் தனி சந்நிதி அமைந்துள்ளது. மார்கழி மாத ரேவதி நட்சத்திர நாளில் இவரது குருபூஜை கொண்டாடப்படுகிறது

முக்தி பெற்ற இடம் மயிலாப்பூர்.

சேக்கிழார்

சேக்கிழார் 12ம் நூற்றாண்டில் குன்றத்தூரில் பிறந்தவர்.

அநபாய சோழரின் அமைச்சராக இருந்த சேக்கிழார் தான் சைவ சமயத்தின் பன்னிரெண்டாம் திரு முறையான பெரிய புராணத்தை இயற்றி யவர். அதற்கு சிவனே "உலகெலாம்"


என்று முதல் அடி எடுத்துக்கொடுத்தார். சோழ அரசன் இவரை யானையின் மீது ஏற்றி, வெண் சாமரம் வீசி இந்த புராணத்தை அரங்கேற்ற செய்தார் என்பது சிறப்பானது. இவர் முக்தி பெற்ற இடம் குன்றத்தூர்.

பூசலார் நாயனார்

8ம் நூற்றாண்டுக்கு முன்னர் பிறந்தவர் பூசலார் நாயனார்.

திருநின்றவூர் என்பது அவர் பிறந்த ஊர். அல்லும் பகலும் சிவனையே எண்ணி வாழ்ந்த பூசலார், தனது ஊரில் சிவனுக்கான கோயில் கட்ட எண்ணினார். பொருள் வசதி இல்லாதால் மனதிலேயே படிப் படியாகக் கட்டத்தொடங்கினார். அதேவேளையில் பல்லவ மன்னன் காடவர்கோன் பிரமாண்டமாக ஒரு கோயிலைக் கட்டி முடித்தான்.

ஆனால் கோயிலின் கும்பாபிஷேக தினத்துக்கு வரமுடியாது என்றும், அதே நாளில் பூசலாரின் கோயிலுக்கு செல்ல இருப்பதாகவும் ஈசன் கூறினார். வியந்து போன, காடவர் கோன் திருநின்றவூர்



வந்து பூசலாரின் பாதம் பணிந்து பரவசமடைந்தான். திருநின்றவூர் ஹிருதயவிலாசர் ஆலயத்தின் கருவறையில் ஈசனுக்கு அருகிலேயே பூசலார் இருப்பது சிறப்பு.

முக்தி பெற்ற இடம் திருநின்றவூர்.

மனச்சோர்வு


நீங்கள் எப்போதும் மனச்சோர்வுக்கு இடம் தராதீர்கள். இவ்வுலகில் எதுவும் நிரந்தரமன்று. உங்களுக்கு ஒரு காலத்தில் இளம் உடல் இருந்தது. இப்போதோ வளர்ந்த உடல் இருக்கின்றது. நாளை அதுவே முதிர்ந்த உடலாகும். பின்பு ஒரு நாள் அதுவே செத்துப் போகும். ஆனால் "நான்" ஆன்மா அழிவற்றவன் என்பதை நினைவில் கொள்க!

நீங்கள் கால்பந்து விளையாடும் பொழுது பந்தை காலால் தட்டுகின்றீர். பந்து வேகமாகச் செல்லும். பந்தின் வேகத்தைக் கண்டு ஆனந்தம் அடைகின்றீர். அதுபோல, உங்கள் மனம் கால்பந்தாக இருக்கட்டும். அது எங்கு சென்றாலும் அதைக் கண்டு மகிழுங்கள்.

அறிபவர்கள் நாம், பார்ப்பவர்கள் நாம்,அந்த உண்மையை மறக்காதீர்கள் மனச்சோர்வு ஏற்படும் பொழுது இந்த உண்மையை நினைவில் கொள்ளுங்கள். குதித்தெழுந்து மனச்சோர்வை உதறித்தள்ளுங்கள்.

இது தற்காலிகமானது. இதற்கு முன்பும் எனக்கு வந்துள்ளது என்று எண்ணிக்கொள்ளுங்கள். நீங்களே உங்களை குணப்படுத்த முடிகின்ற சக்திவாய்ந்த, அழகிய பகுதி உங்களிடமே உள்ளது. அந்த சக்தியை பயன்படுத்திக் கொள்ளுங்கள். மனதின் மற்றொரு பகுதிக்கு அடிமையாகி விடாதீர்கள்.

மாதவ்ராவ் அட்கர் வாழ்கை வரலாறு!


மாதவ்ராவ் வாமன்ராவ் அட்கர்

நாம் இன்று, நம் பகவான் சா யிநாதரை போற்றி புகழ்ந்து பாடி களிப்புறும் "ஆர்த்தி சாயிபாபா" பாடலை இயற்றிய

மேன்மைதாங்கிய, ஸ்ரீ மாதவ்ராவ் வாமன்ராவ் அட்கர் அவர்களின் சுய சரிதையை, அவரது பேரன் திரு. ஜனார்தன் (எ) பாலா சாஹேப் ராமச் சந்திரா அட்கர் அவர்கள் மராத்தியில் மிக அற்புதமாக எழுதி நூலாக வெளி யிட்டுள்ளார்.


நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய அந்த அற்புத நூலை நமது மதிப்பிற்குரிய திரு.டி.ஆர். மாதவன் அவர்கள் அழகு தமிழில் மொழி பெயர்ந்துள்ளார்.

ஸ்ரீ மாதவராவ் அட்கர் அவர்களின் காலத்தால் அழியாத படைப்பான

"ஆர்த்தி சாயிபாபா " பாடலின் மூலம் உலகெங்கும் உள்ள கோடிக் கணக்கான பாபாவின் பக்தர்களின் மனதில் அழியாத நபராக மாறியுள்ளார்.

தன் வாழ்நாள் முழுவதும் பண்பு, பக்தி, பணிவு, பாபாவின் சக சிஷ்யர்களில் தோழமை, கொண்ட செயல்களில் துணிவு என்ற நிறை வாழ்வு வாழ்ந்த அவர் 1877 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ந்தேதி மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அகமது நகரில் பிறந்தார் .

ஸ்ரீ சாயிபாபாவின் தீவிர பக்தரான


டி.ஆர். மாதவன்

அவர் தன் வாழ்நாள் முழுவதும் அவ ரையே பின்பற்றி வாழ்ந்தார். இதனால் அவர் சற்குருவால் அதிகமாக ஆசீர்வதிக் கப் பட்டார்.

ஸ்ரீ மாதவராவ் ஓர் பன் மொழிப் புலவர்.அவருக்கு மராட்டி, உருது, ஹிந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடும் அளவிற்கு மொழித் திறன் இருந்தது. அவர் தமிழ் மொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார் என்பது வியக்கத் தக்க செய்தி.

அவர் ஓர் தனித்துவமான கவிதை இயற்றும் திறமை களைக் கொண்டிருந்தார். அது பகவான் சாயிநாதரின் ஆசீர்வாதத்தால், புகழ் பெற்ற "ஆரத்தி சாயிபாபா " பாடலை இயற்றிய போது உச்சக்கட்டத்தை அடைந்து.



இவ்வுலகில் எங்கெல் லாம் சாயி ஆலயங்கள் உள்ளதோ, அங்கெல்லாம் தினசரி பூஜையின்போது ஆரத்தி சா யிபாபா பாடப்படுகிறது. பாடப்படும், பாடப் பட்டு கொண்டே இருக்கும். அதற்கு அழிவென்பதே கிடையாது.

தனது சற்குருவான சாயிபாபா மீது பக்தியுடன் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்த ஸ்ரீ மாதவராவ் அட்கர் அவர்கள் 1955 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந்தேதி பாபாவின் பாத கமலத்தில் சரணடைந்தார்.

இதைப் போன்ற மேலும் பல அறிய செய்திகளும், ஸ்ரீ மாதவராவ் வாழ்க்கை யில் நிகழ்ந்த பல அறிய நிகழ்வுகளும், சாயி லீலா பத்திரிக்கையில் வெளிவந்த அவரது கட்டுரைகளின் ஆய்வுகளும், அவரது குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களும், ஸ்ரீ மாதவ்ராவ் அட்கர் அவர்களைப்பற்றி நாம் மிகத் தெளிவாக புரிந்து கொள்ளும்படி அழகிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

பாபா பக்தர்கள் அனைவரும் வாங்கி படித்து பயனடைய வேண்டிய புத்தகம்.

புத்தகம் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

டி.ஆர். மாதவன்,

போன்: 9246113116.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

இம்மாத தரிசனத்தில், ஸ்ரீ மத் பாம்பன் சுவாமிகளின் பிரதான சீடரான ஸ்ரீ மத் பாலசுந்தர சுவாமிகளின் சீவ பீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீ மத் பாலசுந்தர சுவாமிகளின் சீவ பீடம்

இம்மாத சித்தர்களின் சீவசமாதி தரிசனக் கட்டுரை 50 ஆவது சிறப்புக் கட்டுரையாக மலர்கிறது. இந்நேரத்தில் எனக்கு ஆசி வழங்கி ஊக்கமும், உற்சாகமும் அளித்த என் குருநாதர்களுக்கும், என்னை எழுத ஊக்குவித்த ஆசிரியர் அவர்களுக்கும், வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மாத தரிசனத்தில், ஸ்ரீ மத் பாம்பன் சுவாமிகளின் பிரதான சீடரான ஸ்ரீ மத் பாலசுந்தர சுவாமிகளின் சீவ பீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.



சுவாமிகள், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி, பிரெஞ்ச் போன்ற மொழிகளில் நன்கு புலமை பெற்றவர்.

சுவாமி விவேகானந்தரைப் போன்று அவருக்குப் பின்பு பல வெளிநாடுகளுக்குச் சென்று ஹிந்து தர்மத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார்

சுவாமிகளின் ஆழ்ந்த, ஆழமான ஆன்மீகச் சொற்பொழிவுகளை, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், பாம்பனார் பைந்தமிழரசு, கருமாரிதாசனார், சோழவரம் நடேசன் சுவாமிகள், ஆகியோர் கேட்டு மகிழ்ந்தவர்களில் சிலராவர்.

திருப்புகழ் சதுரர், சே. த. இராமலிங்கம் அவர்களின் குடும்பத்தினருடன் நெருங்கிப்பழகியவர். தன் வாழ்நாள் முழுவதும் சுத்த பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார் நம் சுவாமிகள்.



அருட்பிரகாச வள்ளலாரை எப்படி அவரது சீடர், ஒரு பாடலை கொடுத்து விளக்கம் கேட்டு சோதனை செய்தாரோ, அதைப் போன்றே, நம் சுவாமிகளும், பாம்பன் சுவாமிகளிடம் சோதனை மேற்கொண்டார். அதன்மூலம் தம் குருநாதரின் வல்லமையை உணர்ந்து அவரையே தன் குருநாதராக ஏற்றுக் கொண்டார். பாம்பன் சுவாமிகளும் இவரை தம் சீடரான ஏற்றுக் கொண்டார்.

வள்ளல் பெருமானாருக்கு வேலாயுதம் பிள்ளை எப்படி முதன்மை சீடரோ, அதேபோல் பாம்பன் சுவாமிகளுக்கு ஸ்ரீ மத் பாலசுந்தரம் சுவாமிகள் முதன்மை சீடரான விளங்கினார்.

ஸ்ரீ பாலசுந்தரம் சுவாமிகள் திருத்தணியில், சத்சங்கம், அன்னதானம் போன்ற ஆன்மீக சேவைகளை செய்து வந்த போது, பாம்பன் சுவாமிகள், நமது சுவாமிகளின் திறனை அறிந்து அவருக்கு, "அத்தியாச்சிரமி" என்ற பட்டத்தை வழங்கி, " குமாரதாசன்" என்ற தீட்சா நாமத்தையும் சூட்டி ஆசி வழங்கினார்.

பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்த 6666 பாடல்களையும் மனப்பாடம் செய்தவர். அதுமட்டுமின்றி, கடினமான அப்பாடல்களுக்கு புரியும்வண்ணம் விளக்கம் கூறுவதில் வல்லவர் நம் சுவாமிகள்.

பாம்பன் சுவாமிகளின் போன்றே கவி படைக்கும் திறன் இருந்தும், பாம்பன் சுவாமிகளின் பாடல்களுக்கு விளக்கம் அளிப்பதையே தன் வாழ்நாள் முழுவதும் தன் பாக்கியமாக கருதினார்.

ஸ்ரீ பாலசுந்தரம் சுவாமிகள் அருளிச் செய்த பொக்கிசங்கள். 1. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சோடச நாமார்ச்சனை. 2. ஸ்ரீ குமார பரமேஸ்வர சோடசநாமார்ச்சனை. 3. ஸ்ரீ குமார பரமேஸ்வர ஷடஷர



நாமார்ச்சனை. 4. ஸ்ரீ குமார போற்றி சோடசம். 5. ஸ்ரீ ஆறுமுக சிவபுராணம். 6.ஸ்ரீ குமர நாமாவளி போன்றவை.

சுவாமிகள் சில காலம் திருவான்மியூரில் தங்கி ஆன்மீக தொண்டாற்றினார்கள். பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையை அடைந்ததும் அவருக்கு சீவ பீடம் கட்டி அதை மடாலயமாக மாற்றி, அம்மடத்திற்கு முதல் மடாதிபதியாக சிலகாலம் சேவையாற்றினார்கள்.

அதன்பின்பு திருவொற்றியூர் அப்பர் சாமி மடத்தில் தங்கி தன் இறுதி காலம் வரை ஆன்மீக சேவையாற்றி அங்கேயே சீவ சமாதி ஆகி இன்றும் தன்னை நாடிவரும் பக்தர்களின் வாழ்க்கையில் பல அற்புதங்களை செய்து வருகிறார்.

சுவாமிகள் சமாதியடைந்த பின்பு வெகுகாலம் அவரைப்பற்றி வெளி உலகிற்கு தெரியாமல் இருந்தது. சுவாமிகளின் சீவ பீடத்தை வெளி உலகிற்கு தெரியப்படுத்தும் பணியை திரு. யோக தண்டம் பொன் பார்த்தசாரதி அய்யா அவர்களும், திரு.சுரேஷ் அய்யா அவர்களும், வெளி உலகிற்கு கடந்த 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் தெரியப் படுத்தினார்கள்.

அதற்கு அடுத்த மாதம், 19.09.2017 செவ்வாய் கிழமை அன்று சுவாமிகளின் 50 ஆவது குருபூஜை. அன்றைய தினம், சித்தர்களின் சேவகன், திரு. முத்து மகேஸ்வரன், திருமதி மோனிகா முத்து மகேஸ்வரன் ஆகியோரின் பெரு முயற்சியால் சிறப்பாக நடைபெற்றது.

அவ்விழாவில், "பாம்பன் சுவாமிகள்" மாத இதழின் ஆசிரியர்



மரியாதைக்குரிய, வீ.கலைச்செல்வன் அய்யா அவர்களும் கலந்து கொண்டார்கள், இவரே அடியேனுக்கு சுவாமிகளைப் பற்றிய வாழ்க்கை குறிப்புகளை கொடுத்து உதவியவர். இவர்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயற்கரிய பல ஆன்மீக சேவைகளை ஆற்றிய ஸ்ரீ மத் பாலசுந்தரம் சுவாமிகள், 03.10.1967 செவ்வாய் கிழமை இரவு 11.20 க்கு திருத்தணிகேசன் நிழலையடைந்தார்.

பாம்பன் சுவாமிகளின் பாடல்களுக்கு தெளிவுரை ஏற்படவேண்டுமானால் ஸ்ரீ மத் பாலசுந்தர சுவாமிகளின் சீவ பீடத்திற்கு சென்று வணங்கினார் நமக்கு தெளிவு கிட்டும். இது அனுபவ உண்மை.

இன்று சுவாமிகளின் சீவ பீடம் பல ஆன்மீக அன்பர்களும் புனரமைக்க பட்டு சிறந்து விளங்குகிறது. 25.9.22 அன்று சுவாமிகளின் 55 வது குருபூஜை. குரு பூஜை நிகழும் இம்மாதத்தில் இக்கட்டுரை வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சி!

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஸ்ரீ மத் பால சுந்தரம் சுவாமிகள் சீவ பீட ஆலயம், அப்பர் சாமி கோவில் தெரு,
அப்பர் சாமி கோவில் அருகில்,
திருவொற்றியூர் கடற்கரை,
சென்னை.

பேரூந்து வழித்தடம்:

சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து பேரூந்து உள்ளது.

இறங்கும் இடம்: அப்பர் சாமி கோவில்.



உ

ஓம்

திருத்தணிகேசன் துணை

வாழ்கநின் பேரருள்! வாழ்கநின் பெருஞ்சீர்!

போற்றிநின் பேரருள் ஸ்ரீலஸ்ரீ பாலசுந்தர சுவாமிகள் சமாதி

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் சீடரும்

திருவான்மியூர் பாம்பன் அடிகள் மடாலய அதிபரும் திருவொற்றியூர்,

அப்பர் சுவாமி ஆலய அதிபரும் ஆகிய அத்தியாசச்சிரமி குமாரதாசன்

எனப்பெயரிய ஸ்ரீலஸ்ரீ பாலசுந்தர சுவாமிகள் 3-10-1967 செவ்வாய்

இரவு 11.20 மணிக்கு திருத்தணிகேசன் திருவடி நிழலையடைந்தார்

இப்படிக்கு

ஸ்ரீ பாலசுந்தர சுவாமிகள் சிஷ்யை

தி.எஸ். திருப்புரசுந்தர அம்மையார் டிரஸ்டி

திருவொற்றியூரான் அடிமை ஜீவ சமாதி அருகில்

(திருவொற்றியூர் கடற்கரை, அப்பர்சாமி கோயில் அருகில்)

புகைவண்டி வழித்தடம்:

சென்னை சென்ட்ரல் கும்மிடிப்பூண்டி

இறங்குமிடம்: திருவொற்றியூர்.

அங்கிருந்து ஷேர் ஆட்டோவின் மூலம் அப்பர் சாமி கோவில் அருகே உள்ள சுவாமிகளின் சீவ பீடத்தை அடையலாம்.

- (தொடரும்)

சித்தர்களின் சீவ சமாதியை வழிபடுவோம்!

நம் கர்மவினையின் வீரியத்தை குறைத்துக் கொள்வோம்!!

சித்தர்களின் பற்றி அறிந்து கொள்ள:

WWW. SIDHDHARS.COM

தமிழ்நாட்டில் சேவை மனப்பான்மையுடன், சித்தர்கள் பிரபஞ்சம், சித்தர் ஜீவன், ஜி.எஸ். டிராவல்ஸ், சித்தர்ஸ். காம் இணைந்து நடத்தும், இருசக்கர வாகன ஆன்மீக பயணம் குழுவின் சித்தர்கள், மகான்களின் ஜீவ சமாதி யாத்திரை மாதந் தோறும் வரும் பவுர்ணமியை ஒட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் ஆன்மீகப் பயணத்தில் கலந்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

அன்புடன்:

இருசக்கர வாகன யாத்திரை நிர்வாகிகள்
சித்தர்கள் பிரபஞ்சம்,
கோ.சுப்பிரமணி, கா. முத்துக்குமார், 9941009897.

சித்தர் ஜீவன் சு. வெங்கடேசன்
9941782523.

ஜி.எஸ். டிராவல்ஸ்
ரா.சுரேஷ், 8939111089

சித்தர்ஸ்.காம்
முத்து மகேஸ்வரன், மோனிகா முத்துமகேஸ்வரன்
9840411176.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

ஜெய் ஸ்ரீ சாய்ராம்! ஜெய் ஸ்ரீ இராதா கிருஷ்ண மாயி!



ஸ்ரீ சாயி பாபாவின் பரிபூரண ஆசியினாலும்,ஸ்ரீ ராதாகிருஷ்ணமாயி அன்னையின் கருணையினாலும், மகான்களின் அருளினாலும், பாபாவின் அடியார்கள், மற்றும் பாபாவின் பக்தர்களின் அன்பினாலும், ஆசியினாலும், நமது அதிதேவதை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி நூலின் ஆசிரியருமான "அம்மையின் மைந்தன்" திரு. சாய் சரவணன் அவர்களுடைய திருமணம், மற்றும் திருமண வரவேற்பு நிகழ்வுகள் சென்ற, 01.09.2022 வியாழன் அன்று கூத்தனூர், சிவ சித்தர் சாய்பாபா பீடத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கூத்தனூர் சரவணன் அவர்கள், பாபாவின் பக்திமார்க்கத்தையும், குரு சரணாகதிக்கும், எடுத்துக் காட்டாக வாழ்ந்த ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை, அன்னையின் அருளால் நூலாக எழுதி பக்தர்களுக்கு அளித்தவர்.

அதுமட்டுமின்றி, தான் எடுத்துக் கொண்ட செயலில் சுயநலம் பாராமல் முழுமனதாக செயலாற்றக்கூடிய நல்ல மனிதர், நல்ல நண்பர், அவருக்கு, அவரது ஆன்மீக சேவையைப் பாராட்டி "அம்மையின் மைந்தன்" என்ற

பட்டத்தை வழங்கி கவுரவித்தது நமது சாயி மகராஜ் குருவை தேடி இதழ்.

அவர் மேன்மேலும் பக்தியிலும், பக்தி இலக்கியத்திலும் சேவை செய்ய வேண்டும் என்பதற்காக, அவரது அன்னை இராதாகிருஷ்ணமாயியே அவருக்குத் தகுந்த மணமகளை தேர்வு செய்து திருமணம் செய்து வைத்துள்ளார். மணமகள் சௌந்தர்யாவும் சாயிக்கும், அன்னைக்கும் சேவை செய்வதில் மிகுந்த விருப்பம் உள்ளவர். இவர்கள் இருவரையும் இல்லற வாழ்வில் இணைத்திருக்கின்றார் நம் அன்னை.

இல்லற வாழ்வில் இனிதே இணைந்திருக்கும் தம்பதிகள் சாய்சரவணன் சாய்சௌந்தர்யா ஆகியோர் பகவான் சாயி நாதரின் அருளாலும், அன்னையின் அருளாலும் எல்லா நலன்களும்


தமிழில் சத்சரிதம் மொழிபெயர்த்த சாயி சொக்கலிங்கத்திடம் ஆசி பெறுகிறார்கள்

பெற்று வாழ்க வளமுடன் என நாம் அனைவரும் வாழ்த்துவோம்.

அதே நாளில் திருமண பந்தத்தில் தன்னை இணைத்துக் கொண்ட அவரது நண்பரும், பாபாவின் பக்தருமான திரு. நெப்போலியன் மனோகரி, ஆகியோரையும் வாழ்க வளமுடன் என் மனதார வாழ்த்துவோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

ஜெய் ஸ்ரீ சாய்ராம்.


பெங்களூர் லட்சுமி ரமணன் அம்மாவிடம் ஆசி பெறுகிறார்கள்

நிரந்தர ஆனந்தம்

சந்தோசமாக இருங்கள். வாழ்வில் எப்போதும் இன்பத்துடன் இருங்கள். ஆனால் அதில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அதாவது உங்களை கட்டுப்படுத்தும் கேளிக்கைகளை தேர்ந்தெடுக்காதீர்கள்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் கேளிக்கைகள் உங்களை எப்போதும் கட்டுப்படுத்தாது, பாதிக்காது என்றால் அதைச் செய்யலாம். நம் நோக்கம் எப்பொழுதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்க!

கேளிக்கையின் மூலம் வரும் இன்பம் பின்னர் துன்பத்தை தரும் என்றால் அது கேளிக்கை அல்ல. நமது நிலையான லட்சியமே உன்மையான பேரின்பமாகும்.

ஆன்மீக சாதகர் அல்லது பக்தர் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர் சிரிக்கக்கூடாது, கேளிக்கை கூடாது. என்று எண்ணுகின்றார்கள் அப்படி என்றால் அது வாழும் வாழ்க்கையல்ல.

வாழ்க்கை எப்பொழுதும், இன்பமும், மகிழ்ச்சியும், கொண்டாட்டமுமாக இருக்க வேண்டும். மனதை சிக்கலில் சிக்க வைக்காமல், நல்ல நிலையில் வைத்திருந்தால்தான் அத்தகைய வாழ்க்கை சாத்தியமாகும்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் .ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000..
திரு.சோலைமுத்து குடும்பத்தார். அரியலூர்.ரூ.1000
திரு. உமா முருகன், வர்ஷினி, விசாலினி, சின்னாளபட்டி.ரூ.1500.
திரு. லாவண்யா மோகன். திருப்பூர். ரூ.1000.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800
திரு. டி.கோவிந்தராஜூ குடும்பத்தார். வேளச்சேரி. ரூ.500.
திரு.பி.இராஜகோபால்.நங்கநல்லூர். ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.

திரு. சாய்கிருபா. மதுரை .ரூ 500.
திருமதி.சுகன்யா.சென்னை. ரூ.500.
திருமதி. நித்யா. கூடுவாஞ்சேரி. ரூ.500.
திருமதி.ஜெயலட்சுமி தேவகுமார். ரூ.500
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி, பெரியார் நகர். ரூ.500.
திருமதி. ஜெயந்தி தியாகராஜன். மாவுத்தம்பட்டி.ரூ.500.
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.விஜயலட்சுமி. கீழ்க்கட்டளை. ரூ.300.
திரு.ஆனந்த். கீழ்க்கட்டளை. ரூ.300.
திருமதி.ஜெயலட்சுமி. திருவள்ளுவர் நகர். அயனாவரம். ரூ.300.
திரு. ஜெயந்தன் நிஷா. கொளத்தூர். ரூ.200
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.
அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி. லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.200
திருமதி. வரலட்சுமி பிரபாகரன்.
அயனாவரம். ரூ.200.
திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.
திருமதி. பிரியா குடும்பத்தார்.
அயனாவரம். ரூ.101.
திரு. கே.எஸ். பத்ரிநாத். வில்லிவாக்கம்.ரூ.101.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.
திருமதி.உமா முருகன். AYK.ரூ.100.
திரு.சிவா அரிசி மளிகை பெரியார் நகர் ரூ.50.
பெரியார் நகர் பாபா பக்தர்கள். ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.
டாக்டர். மாதவன். நுங்கம்பாக்கம். அரிசி 10 கி. மளிகை, காய்கறிகள்.
திருமதி.லெட்சுமி பிச்சைநாதன், மந்தைவெளி. ரூ.500



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஓவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி.சுமதி. வாழ்க வளமுடன் கொளத்தூர். ரூ.500.
திருமதி. லோகேஸ்வரி கார்த்திக். மதுரை. ரூ.500.
திரு. பி. இராஜகோபால்.நங்கநல்லூர். ரூ. 500
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068